
உ
சிவமயம்



மீசாலையைப் பிறப்பிடமாகவும்,
கோப்பாய் தெற்கு, இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# சிவசிதம்பரதேசிகர் சண்முகதாஸ் குருக்கள்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

07.11.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



மீசாலையைப் பிறப்பிடமாகவும்,
கோப்பாய் தெற்கு, இருபாலையை
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்

# சிவசிதம்பரதேசிகர் சண்முகதாஸ் குருக்கள்

*அவர்களின் சிவபதப்பேறு குறித்த*

# நினைவு மலர்

**07.11.2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எமது அன்புத் தெய்வத்தின்*
*பாதக்கமலத்திற்கு இந்நூல்*

# சமர்ப்பணம்

எமது இதயத் தெய்வமான
அன்புத் தந்தை
சிவசிதம்பரதேசிகர் சண்முகதாஸ் குருக்கள்
அவர்கள் தம் தூய ஆத்மா
எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளில்
நிலையான நித்திய ஆத்ம சாந்தி பெற
வேண்டுமெனப் பிரார்த்தித்து
இந்நினைவு மலர்தனை அவர் பாதங்களில்
எமது கண்ணீர் நிறைந்த
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ஓம் நமசிவாய



தோற்றம்
01.04.1951

அமரர்

மறைவு
27.10.2017

# சிவசிதம்பரதேசிகர் சண்முகதாஸ் குருக்கள்

அவர்களின்

## திதி வெண்பா

ஏவிளம்பி ஆண்டு ஐப்பசித் திங்கள் வளர்பிறை அட்டமியில்
பூவிளங்கும் பொன்மகனாம் சண்முகதாஸ் குருக்கள் பார்விளங்க
பரமன் கழல் பணிபுரிந்து புகழேற்ற செம்மல்
பரமனடி சென்றடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாடல்கள்

## பஞ்ச புராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் வேழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்! மீண்டும் பிறப்புண்டேலுன்னை யென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும்போதுன் னடியின் கீழிருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் வைசநீதி விளங்குக உலகமெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட எங்கள் அப்பாவின் வாழ்க்கைத் தடம்

இந்து சமுத்திரத்தின் முத்தென அழைக்கப்படும் ஈழவள நாட்டின் கந்தபுராணக் கலாச்சாரத்தின் உறைவிடமாய் விளங்கும் யாழ் குடாநாட்டில் தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சேரியின் வடபால் அமைந்த கிராமம் தான் மீசாலை ஆகும். இக்கிராமத்தின் புகழ் பரப்பும் மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் பலதலை முறைகளாய் பூசை ஆற்றிய சைவக்குரு வழித்தோன்றல் துரைச்சாமிக் குருக்கள் மகன் சிவசிதம்பரதேசிகர் இராசலட்சுமி அம்மா தம்பதிகட்கு சிரேஷ்ட புத்திரனாக 01.04.1951ம் ஆண்டு அவதரித்த அருந்தவப் புதல்வன் தான் அமரர் சி.சண்முகதாசக் குருக்கள்.

இவருக்கு சிவராச ஐயர், துரைச்சாமி ஐயர், சச்சிதானந்த ஐயர், கோதாண்டதாஸ் குருக்கள், லம்போதர ஜோதி ஐயர், துருவாசகர் (அமரர்) என்ற ஆறு தம்பிமார்களும் புவனேஸ்வரி, அமிர்தவல்லி என்ற இரு தங்கைகளும் உடன்பிறப்பாக அவதரித்தனர். தனது தாயாரின் ஊரான கோயிலாக்கண்டியில் தம்பி தங்கைகள் புடைசூழ வளர்ந்து வந்தார். பேரர்களான துரைச்சாமி ஐயர் பறுவதம்மா, சோமசுந்தந்தரம் ஐயா சிவகெங்கை அம்மா ஆகியோரின் அரவணைப்பில் வளர்ந்தவர் ஐந்து வயதில் சிவதீட்சை பெற்று ஆசாரசீலராக கோயிலாக்கண்டி மத்தியில் அமைந்துள்ள திருமூலேஸ்வரி சமேத திருமூலேஸ்வர நாதன் ஆலயத்தின் பெற்றோர் வழி உருத்துடன் பூசகராகத் தொண்டாற்றியவர். தனது பாடசாலை கல்வியை யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கற்றுத் தேறினார். அதன் பயனாக வைத்திலிங்கம் நடராசா ஐயரின் வழிகாட்டலில் நல்லூர் கந்தசாமி ஆலயம் முன்வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் அச்சகத்தில் பணியாற்றும் பாக்கியமும் கிடைத்தது. மிக அமைதியாகவும், அதி எளிமையாகவும் தன்னை வளர்த்துக் கொண்ட அமரர் சண்முகதாஸ் அவர்கள் தனதூர் காளி கோவில் அம்பலத்தார் அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரவர் கோவில் முதலியவற்றிலும் பூசைகளை ஆற்றியவர், பருத்தித்துறை அத்தியடிப் பிள்ளையார், குரும்பசிட்டி அம்மன் யா/சுண்டிக்குழிப் பிள்ளையார், நல்லூர் கந்தசாமி கோவில் போன்ற பல ஆலயங்களைத் தரிப்பதோடு பூசைகளுக்கேற்ற பூமாலைகளையும் அழகுறத் தயாரித்துக் கொடுக்கும் பணியையும் மன நிறைவோடு ஆற்றி வந்தார். "என்கடன் அவன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கமைய அச்சகத் தொழிலுடன் ஆலயப் பணிகளையும் நேர்த்தியாகச் செய்து வந்தார்.

திருமண வயதை அடைந்த இவருக்கு பெற்றோர் கோப்பாய் தெற்கு இருபாலை கற்பகப் பிள்ளையார் பூசகர் வழித் தோன்றல் சிவசுப்பிரமணியதேசிகர் பராசக்தி அம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியான மங்கை மதிவதனியை 1979ம் ஆண்டு வதுவை செய்து வைத்திட அதன் பேறாக கோபி என்ற கோபாலகிருஷ்ணனும் அடுத்து குழந்தை உளம் படைத்த மகள் ஸ்ரீரஞ்சினியும் கடைக்குட்டியாக சித்திரா என்ற சித்திரவதனியும் பிறந்தனர். இல்லற இன்பத்தில் மூழ்கி மக்கள் மூவரையும் அன்பினால் அரவணைத்து அறிவூட்டி மகிழ்ந்தவர் தன் ஆத்ம திருப்தியாக தன் பிதாவழித் தொண்டான அபரக்கிரியைகளை செய்யும் தொழிலையும் மேற்கொண்டு அத்துறையிலும் மிக்க அறிவு பெற்று மிகச் சிறப்பாக அபரக்கிரியை தொண்டையும் ஆற்றி வந்தார்.

பயந்த சுபாவமும் பணிவும் கொண்ட இவரது மூத்த மகன் கோபி நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாளராகி தன் உண்மை உழைப்பால் பதவி உயர்ந்து பதில் களஞ்சியக் காப்பாளர் பதவி கிடைத்ததோடு துவாளி வீதி, இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த அம்பாத்துரைக் குருக்கள் லலிதாம்பிகை அம்மா தம்பதிகளின் இரணையில் ஒருவரான வளர்மதியெனும் நங்கையை கரம்பற்றி மகிழ்வோடும் அவர்களின் செல்வங்களான அபிசன், அம்சவர்த்தன் ஆகிய இரு பேரக்குழந்தைகளுடன் இன்புற்றவர். இறுதியில் ஆர்த்தி என்ற பேர்த்தியையும் கண்டு குதூகலித்தவருக்கு எவரையும் வாட்டும் பிணி மூப்பு இவரையும் வாட்டியது. 11.04.2010ம் ஆண்டு அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்த போதும் தளராது தன் பிள்ளைகளை அரவணைத்தவருக்கு நோய் வந்தபோது சற்று மனந் தளர்ந்தார். இருந்தும் மகன் கோபி மருமகள் "மானா"வின் பராமரிப்பில் தன் கடமைகளைத் தானே இறக்கும் வரை செய்தவர். தன் கடைசி மகள் சித்ராவிற்கு சங்குவேலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த கனகேஸ்வரன் விஜயலக்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வன் டுஸ்யந்தன் என்பவரைத் திருமணஞ் செய்து மகிழ்வித்து அவர்கள் பிரான்ஸ் நாடு சென்று இனிதே இல்லற இன்பம் கண்டு இன்புற்றிருப்பதையும் அறிந்து மனந்தேறி மகிழ்வடைந்தார்.

இறுதியாக 27.10.2017 அன்று தனது இதய நோய்க்கான மருத்தினை யாழ்/போதனா வைத்தியசாலையில் எடுத்துக் கொண்டு பேரப்பிள்ளைகளுக்கு அப்பிள் பழங்களும் வாங்கிக் கொண்டு தன் நண்பன் நல்லூரில் வசிக்கும் செல்வரத்தினம் என்பவரின் இல்லம் சென்று இதுதான் கடைசிச் சந்திப்பு என்று அறியாது கதைத்து மகிழ்ந்த பின் நல்லூரில் இருந்து தன் இருபாலை வீட்டிற்குச் செல்ல பேரூந்தில் ஏறி அமர்ந்தவர் அன்றே அப்பேரூந்தில் இருந்தபடியே எவருக்கும் தொல்லை கொடுக்காது, நோயுற்றிடராது நொந்து மனம் வாடாது பாயில் படுக்காது பரன் அடி சேர்ந்து விட்டார்.

அப்பா, அப்பா என மகனும் மகளும் அழுது புலம்ப மாமா மாமா என மருமகன் டுஸ்யந்தன் கதற, அப்பப்பாவைக் காணாது பேரக்குழந்தைகள் தேடிக் கலங்க எமக்கெல்லாம் இப்படி ஒரு நல்ல "சா" வராதா என உறவினர் தவிக்க, யார் எமக்கினி கிரியை செய உளர் என உற்றார் பதற சண்முகதாசக் குருக்கள் அவர்கள் இரண்டாயிரத்துப் பதினேழு ஐப்பசி பத்தாம் நாள் அட்டமித் திதியில் மீளாத்துயில் கொண்டு விட்டார்.

*"எப்பவோ முடிந்த காரியம் நாமறியோம்*
*முழுவதும் உண்மை"*

பிள்ளைகள்
கோபி
ரஞ்சினி, சித்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றஞ்சினி, கோபி புலம்பல்

அப்பா என்றால் கண்டிப்பு மிக்கவர்
என்று எல்லோரும் சொல்லும் போது
எங்க அப்பா மட்டும் விதிவிலக்கு
எங்க அப்பா பேசமாட்டார், அடிக்க மாட்டார்
என்று சொல்லுவோம்.

அப்பா நீங்க பட்ட கஷ்ரம்
வேதனையை நாங்கள் அனுபவிக்க கூடாது
என்று உங்க ஆசையை துறந்து
எங்களுக்காக மட்டுமே வாழ்ந்தீர்கள்.

அப்பா! நான் தந்தையான பிறகு தான்,
நீங்கள் எங்களுக்காகப் பட்ட வேதனையை
மனதார உணர்ந்தேன்
நான் ஆசைப்பட்ட எதையும்
நீங்க மறுத்ததில்லை.

காலையில் என்னுடன் கதைத்த அப்பா
மதியம் அப்பாவை காணல என்று
என் மனம் தவிக்கும் போது
நீங்கள் எங்களை விட்டு போன
சேதியை தாங்க முடியல.

36 வருடங்கள் என்கூட வாழ்ந்த
வாழ்க்கையை மறக்க முடியல
உங்களைப் போல் தெய்வத்தை
எனி நான் எங்கு தேடுவேன்

உங்களுக்கு வந்த சாவு
யாருக்கும் வராது என்று எல்லோரும்
கதைக்கும் போது
என் நெஞ்சமே உடைஞ்சு போன
மாதிரி இருக்குது
உங்க நினைவுடன்
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் சித்திரா புலம்பல்

அப்பா. நீங்க என்மீது தான் அதிக பாசத்தையும்
செல்லத்தையும் கொட்டி வளர்த்தீர்கள்
ஏனென்றால் நான் கடைக்குட்டி என்று
நானும் அம்மாவை விட்டு பிரிந்தாலும்
உங்க கையை விட்டு எங்கேயும் போகமாட்டேன்.

நீங்கள் எங்கு போனாலும் நான் தான்
முன்னுக்கு வந்து நிற்பேன்
பாடசாலை விடுமுறை என்றால்
என்னையும் கூட்டிக் கொண்டு
ஊர் சுத்துற சந்தோஷம் திரும்ப வராது
(நெடுந்தூர Cycle பயணம்)

யாரைப் பிரித்தாலும் சித்திராவையும்
அப்பாவையும் பிரிக்க முடியாது
அம்மாவின் பிரிவை கூட உங்க
ஆறுதலில் தாங்கின எனக்கு
உங்க பிரிவை தாங்கிற சக்தி எனக்கில்லை.

பிள்ளைகளைப் பேசி, அடிக்காத
பெருமையும் உங்களுக்கே
எவ்வளவு பிரச்சினை வேதனை
அனுபவித்தும் கலங்காத கண்கள்
தளராத மனமும் நான் அழுதால்
தாங்கமாட்டீங்க நீங்க அழுவீங்க
தனியே அப்பாவாக மட்டும் இருந்து விடாமல்
அம்மாவாகவும் இருந்து என்னை வளர்த்தீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வளர்ந்தாலும் என்னை சிறுபிள்ளை
போலவே செல்லத்தை அள்ளித்தந்து
என் நினைவிலே இருந்தீர்கள்
நீங்க தந்த அளவுக்கதிகமாக
பாசத்தினால் தான் உங்கள் பிரிவை
தாங்க முடியாமல் தவிக்கிறேன்.

என்னுடன் என்ன கதைக்கனும்
என்று கற்பனை பண்ணி சொல்லாத
ஏக்கத்துடன் போணீங்களோ?
இன்னும் ஓரிரு ஆண்டுகள் இவ்வுலகில்
விட்டு வைக்க காலனுக்குப் பொறுக்க வில்லையா?

அண்ணாவின் பெண்பிள்ளை ஆர்த்தி
பிறந்தும் எனக்குக் கூறினீர்கள்
உன்னை பிறந்தவுடன் பார்த்த மாதிரி
பிள்ளை இருக்குது என்று மகிழ்ந்தீர்கள்
பிள்ளைக்கு பெயரும் சூட்டினீர்கள்.

## பேரன் அபிஷன்


அப்பப்பா! நான் குழந்தையாக இருக்கும் போது
பெட்டி பெட்டியாக கண்டோஸ் வாங்கி வைத்திருப்பீர்கள்
நான் தவண்டு தவண்டு உங்க அறையினுள்
வரும் போது கண்டோஸ் தருவீங்க
நான் வளர்ந்தாலும் எனக்கு அப்பப்பா தான் விருப்பம்
யாருக்கும் தெரியாமல் காசு தருவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன் அம்சவர்த்தன்

எடேய், எடேய் என்று பாசமாகக் கூப்பிட்டு
கண்டோஸ் கள்ளத் தின்பண்டம் தருவீங்க
எங்கள் குழப்படியையும் குறும்புத் தன்மையையும்
பார்த்து மகிழ்வீங்க
நல்லாபடி படி என்று சொல்லுவீங்க
உங்க அறையை தினம் தினம்
எட்டிப் பார்த்து உங்களை காணால என்று
தேடுறேன் அப்பப்பா.....
நீங்கள் எங்களை நினைத்து வாங்கிய
Apple, Orange கூட பஸ் குள்ளே சிதறிக் கிடக்குது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபரக் கிரியை விளக்கம்

தொகுத்தவர்
கிரியா வித்தகர் குருமணி விநாயகபூஜா துரந்தரர்
சிவஸ்ரீ கந்த. சிவபாதசுந்தரக் குருக்கள்

## அபரக் கிரியை விளக்கம்

நாம் முற்பிறவிகளிலே செய்து கொண்ட நல்வினைப் பயனாலே இப்பொழுது அரியதாகிய மனிதப் பிறவியை எடுத்திருக்கின்றோம். இப்பிறவி எமக்கு அறிவிக்காமலே வந்தது. ஒரு நாளைக்கு எமக்கு அறிவிக்காமலே போய்விடும். அதாவது இந்த உயிர் உடலை விட்டுப் போய் விடும். அந்தக் காலம் எப்பொழுது வரும் என்று ஒருவருக்கும் தெரியாது. பிறப்பு எப்பொழுது இறைவனால் நிச்சயிக்கப்படுகின்றதோ அன்றே மரணமும் நிச்சயிக்கப்படுகின்றது. இவ்வுலகில் பிறந்த எந்த சீவராசிகளும் இறக்காமல் நிலைத்து இருக்க முடியாது. என்றோ ஒரு நாளைக்கு இறந்தேயாக வேண்டும். அந்த இறப்பு, பிறந்த அன்றும் வரலாம். நூறு வயதிலும் வரலாம். இளமையிலும் வரலாம். முதுமையிலும் வரலாம். நாம் வாடகைக்கு வீடு எடுத்துக் கொண்டு இருக்கிறோம். கால எல்லை முடிவடைந்தவுடனே அந்த வீட்டைக் காலி செய்துவிட்டு வேறு வீடு பார்த்துச் செல்லுகின்றோம். இதே போன்றுதான் இந்த ஆன்மாவும் தாம் செய்து கொண்ட வினைக்கு ஈடாக ஒவ்வொரு உடம்பையும் பெறுகின்றது.

நாங்கள் உலகிலே வாழ்கின்ற காலங்களிலே நல்லறங்களைச் செய்து கொள்ளுதல் வேண்டும். எமது இறுதிக் காலத்திலே வயோதிபம் வந்து எம்மை வாட்டும். தலை நரைக்கின்றது. பல் விழுகின்றது, கண்கள் இருண்டு விடுகின்றது, காது கேட்காது போய்விடுகின்றது. தேகம் செயலிழந்து போய்ப் படுக்கையில் விழுந்து விடுகின்றது. இறக்கப் போகின்றவர் மரணச் தறுவாயில், தான் செய்த பாவங்கள் நீங்கி நற்கதியை அடைவதற்காகக் கோதானம் முதலிய தானங்களைச் செய்தல் வேண்டும் என்று ஆகமங்களிலே கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோதானம் :-**

கோதானம் மரணமாக இருப்பவரது கையினாலே செய்வது தான் உத்தமம். அவர் அறிவிழந்து இருந்தால் பிள்ளைகள் அவர் பொருட்டு இதைச் செய்யலாம்.

மரணமாகவிருப்பவரது பிள்ளைகள் தங்கள் குலகுருவை அழைத்து வந்து அவரைக்கொண்டு மரணமாக விருப்பவருக்குக் கை அலம்ப நீர் கொடுத்து விபூதி அணிவித்து பவித்திரம் தரித்து விநாயக வழிபாட்டோடு சங்கற்பிக்கவும். பின் புண்ணியாகவாசனம் செய்வித்து அந்த ஜலத்தினால் புரோட்சித்து தன்னையும் கர்த்தாவையும் இடத்தையும் சுத்தப்படுத்திக் கொண்டு கர்த்தாவுக்குப் பஞ்சகௌவியம் குடிக்கக் கொடுக்கவும். அதன் பின்பு நல்ல இலட்சணம் உள்ள ஒரு பசு மாட்டைக் கொண்டு வந்து கோபூசை செய்து வழிபட்ட பின்பு அந்தக் கோமாதாவின் வாலைக் கர்த்தாவின் வலதுகரத்துள் வைத்து நீர் வார்த்துத் தானமாகக் குருவுக்குக் கொடுக்கவும். அவர் அதை ஏற்றுக் கொண்டு தானபலத்தைக் கர்த்தாவிடத்தில் கொடுப்பார். இவ்வாறு கோதானம் செய்த பின்பு தசதானமும் கர்த்தாவைக் கொண்டு செய்விக்கவும். அந்த தசதான பலத்தையெல்லாம் குருவானவர் தரப் பெற்றுக்கொண்டு அவருக்குக் குருதெட்சணை கொடுத்து அவரைத் திருப்திப்படுத்தி அனுப்பி வைக்கவும்.

இந்தக் கோதானம் மரணமாக இருப்பவரது கையினாலே செய்விப்பதுதான் மிகச் சிறந்ததாகும்.

**தசதானம் என்பது :-**

1. கோ (பசு) 2. பூ(பூமி) 3. திலம் (எள்ளு) 4. ஹிரணியம் (காசு) 5. ஆய்யியம் (நெய்) 6. வஸ்திரம் (வேட்டி) 7. தானியம் (நெல்லு) 8. குளம் (வெல்லம்) 9. ரௌப்பியம் (வெள்ளி)
10. லவனம் (உப்பு) என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்திய கருமம் :-**

பின்பு வடக்குத் தெற்காகத் தரையைக் கோமயத்தினாலே மெழுகிச் சுத்தப்படுத்தி அதில் தர்ப்பையைப் பரப்பி அதன் மேல் மரணமாக இருப்பவரைத் தெற்கே தலைவைத்துக் கிடத்த வேண்டும். தலைமாட்டிலே புத்திரன் இருந்து இறப்பவரது தலையைத் தனது மடிமீது வைத்து பாலை வார்க்க வேண்டும். சுற்றத்தவர்கள் திருமுறை ஓதுதல் வேண்டும். புத்திரன் இறக்க இருப்பவரது வலது காதில் மூலமந்திரம் மகாமிருத்தியுஞ்சய மந்திரம் இவைகளைச் சொல்லுதல் வேண்டும். தற்காலத்திலே இறப்பவரைக் கட்டிலிலே கிடத்துகின்றார்கள். அதுவும் இறந்த பின்பு தான் தெற்கே தலைவைத்துக் கிடத்துகின்றார்கள். இது மிகத் தவறான செயலாகும். சீவன் போகின்ற பொழுது தெற்கே தலை வைத்து வடக்கே பார்த்தபடி நிமிர்ந்து கிடந்து மரணமாவது தான் மிக மேலான பலனைத் தரும்.

**மண்டபம் அமைத்தல்**

கிரியை செய்கின்ற இடத்தில் பந்தல்இட்டு வெள்ளைகட்டி, மாவிலை, தோரணம், குலை வாழை, பூச்சரம் முதலியவைகளால் அலங்கரிக்கவும். தரையைக் கோமயத்தினால் சதுரமாக மெழுகவும் தரையை ஒன்பது பதங்களாகப் பங்கிட்டு அரிசி மாவினால் கோலம் போட்டுக்கொள்ளவும். மேற்குப் பக்கத்திலே பூதவுடலைச் சுத்தப்படுத்துவதற்காக ஸ்நபனகும்பங்களை வைக்கவும். நடுப்பதத்தில் அக்கினிகாரியம் செய்வதற்காகச் சதுரக்குண்டம் ஒன்று அமைத்துக் கொள்ளவும். நிருதித் திக்கிலுள்ள பதத்தில் புண்ணியாகவாசன கும்பத்தையும், பஞ்சகெளவியத்தையும் அமைத்துக் கொள்ளவும். கிழக்குத் திக்கிலுள்ள பதத்தில் உரலும் உலக்கையும் பேரியும் ஒரு கும்பமும் அமைத்துக்கொள்ளவும். வடக்குத் திக்கிலுள்ள பதத்திலே மயானத்திற்குக் கொண்டு செல்வதற்காக முட்டியிலே ஒரு கும்பத்தை அமைத்துக்கொள்ளவும். இவைகள் மண்டப அமைப்பு முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரலைச்சுற்றி நல்லெண்ணை அரப்பு எலுமிச்சம்பழம் தெட்சணை அபிஷேகப்பொருட்கள் பூத உடலுக்குக் கட்டுகின்ற உடுப்பு முதலிய பொருட்களை வைக்க வேண்டும். கிரியை செய்கின்ற கர்த்தாவானவர் சௌரம் செய்து, ஸ்நானம் முடித்து, கோடி வஸ்திரம் இரண்டு தரித்து, சந்தியாவந்தனஞ் செய்து கொள்ளுதல் வேண்டும். தனிவஸ்திரம் கட்டக்கூடாது. வேட்டியுடன் சால்வைத் துண்டும் கட்டிக்கொள்ள வேண்டும்.

## சூர்ணோற்சவ கிரியை

**கும்ப பூசை :**

குருவானவர் கர்த்தாவுக்கு (கிரியை செய்பவருக்கு) விபூதி கொடுத்து பவித்திரம் அணியச் செய்து சங்கற்பம் செய்து கொள்ளுவார்.

**சங்கற்ப மந்திரங்களின் கருத்து :**

இன்ன வருட, அயன, மாத, பட்ச, நட்சத்திர திதி, வார தினத்திலே இன்னபெயருடைய என்னுடைய பிதா அல்லது மாதாவினது பூதவுடல் சுத்தி செய்வதற்காகவும் சிவாக்கினியை மூட்டுவதற்காகவும் இந்தக்கிரியையைச் செய்கின்றேன் என்பதாகும். இவ்வாறு சங்கற்பம் செய்து விநாயக வழிபாடு, புண்ணியாகவாசனம் முதலிய ஆரம்பக் கிரியைகளை முடித்துக் கொண்டு குருவானவர் பிரதான கும்பபூசையைத் தொடங்குவார். முதலில் புண்ணியாக பஞ்சகௌவிய தீரத்தத்தினால் மண்டபத்தைப் புரோட்சணம் செய்து கொள்ளுவார். அதன்பின் நெற்பொரிகளை மண்டபத்தில் இறைத்துக் கொள்ளுவார்.


**இறைக்கும் திரவியங்கள்:**

நெற்பொரி, சந்தனம், வெண்கடுகு, விபூதி, புஷ்பம், தர்பை, அக்ஷதை என்பன. கர்த்தாவும் குருவும் இடமாக உபவீதம் தரித்துக் கொள்ளுதல் வேண்டும். ஆசாரியர் விபரீத சகளீகரணம் செய்து கொள்ளுதல் வேண்டும். அதாவது சங்காரக்கிரமமாக கனிஷ்ட விரல் தொடக்கம் அங்குஷ்ட விரல் பரியந்தமாகவும், முழங்கால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [illegible] மண்டபம்



மண்டபம்




**சூர்ணோற்ஸவ**
**மண்டப விளக்கம்**

1 பஞ்சகௌவியம்

2 ஸ்நபன கும்பம்

3 ஹோம குண்டம்

4 (ருத்திர) கும்பம்

5 உரல் – உலக்கை

6 பேரிகை

7 ருத்திர கும்பம் (இது மயானத்திற்கு சிவாக்கினியுடன் கொண்டு செல்லப்படுவது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் சிரசு பரியந்தமாகவும், கரநியாசம் அங்க நியாசங்களைச் செய்து கொண்டு சிவோகம்பாவனை நிலைக்கு வருதல் வேண்டும்.

அதன் பின்பு ஸ்நபன கும்பபூசையைச் சங்காரக்கிரமமாகச் செய்துகொண்டு அதன் மேல் அக்கினிகாரியத்தைக் கிரமமாக நடத்தி வேண்டிய ஆகுதிகளைக் கொடுத்து பூரணாகுதி செய்து கிரியைகளை நிறைவுபடுத்தவும். கர்த்தாவிடம் நெற்பொரிகளைக் கொடுத்து அதைப் பூதவுடலின் மேல் போட்டுத் தீபாராதனை முடித்த பின்பு பூதவுடலைக் குளிப்பாட்ட வேண்டும். பின்பு கும்ப தீர்த்தத்தால் பூதவுடலைப் புனிதப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

அதன்மேல் பூதவுடலை அலங்கரித்துக்கொண்டு வந்து மண்டபத்திலே தெற்கே சிரசாகக் கிடத்தவும். பூதவுடலுக்குச் சங்காரக்கிரமமாக விபூதி அணிவித்துக் கொள்ளுதல் வேண்டும். விபூதி பூசும்பொழுது பக்தியோடு மந்திரமாவது நீறு முதலிய திருமுறைப் பதிகங்களை ஓதுதல் வேண்டும்.

**பேரீதாடனம்:**

பேரீதாடனம் என்பது பேரிகை (மேளம்) அடித்தல் என்பதாகும். அதில்வரும் மந்திரங்களின் கருத்து: சுவர்க்கம், பூவுலகம், பாதாளம் ஆகிய மூன்று இடங்களில் உள்ளவர் களுக்கும் நன்மை உண்டாகவும் எல்லாப் பிசாசுகளும் பறந்தோடும் பொருட்டும், ஆசாரியரான யான் அஸ்திர மந்திரத்தால் இப்பொழுது மூன்று முறை பேரீதாடனம் செய்கின்றேன். சிவதீக்ஷிதராகிய இவர் பூவுலக சஞ்சாரத்தை நீக்கிப் பாரமர்த்திகமான சுகத்தை அனுபவிக்கும் பொருட்டுச் சிவலோக யாத்திரைக்குச் சென்றுவிட்டார். இது ஒரு புதிதான மங்கலம். ஆதலால் இப்பொழுது பேரீதாடனம் செய்கின்றேன் என்பதாகும். பேரியில் இரு பக்கங்களிலும் மத்தியிலும் பிரமன், விஷ்ணு, உருத்திரன் இவர்களையும் சப்த மாதர்களையும் வலம் இடமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு வட்டங்களிலும் சூரியன், சந்திரன் இவர்களையும் பூசிக்க வேண்டும். தற்காலத்தில் பேரிகைக்குப் பதிலாக மணியை வைத்துப் பேரிகையாகப் பாவித்துப் பூசித்து அடிக்கின்றார்கள்.

**சுண்ணம் இடித்தல் :**

(உரலில் பூமி தேவியையும் உலக்கையில் மகாமேரு பர்வதத்தையும் பூசிப்பது)

உரலையும், உலக்கையையும் வைத்து அதில் பூமிதேவியையும், மகாமேரு மலையையும் பூசித்து உரலினுள்ளே மஞ்சட்பொடி, அறுகு, நல்லெண்ணெய் இவைகளையிட்டு பத மந்திரம் கூறியும் திருமுறை, திருவாசகம் ஓதியும் இடித்தல் வேண்டும். சைவசமய மக்கள் மத்தியிலே இன்று ஒரு சந்தேகம் எழுந்துள்ளது. அதாவது பூத உடலுக்கு அபிஷேகம் செய்த பின்பு சுண்ணம் இடிப்பது சரியா? அல்லது சுண்ணம் இடித்த பின்பு அபிஷேகம் செய்வது சரியா? என்பதாகும்.

இதை இந்த இடத்திலே ஆராய்ந்து பார்ப்போம். பூத உடல் அசுத்தமானது. அதனைப் புனிதப்படுத்திச் சிவத்தன்மையை உண்டாக்குவதற்காகத் தான் முன்பு சிவகும்பத்தை வைத்துப் பூசித்து அந்தத் தீர்த்தத்தினாலே அபிஷேகம் செய்தாகும்.

இதனால் பூதவுடல் சிவத்தன்மையை அடைகின்றது. இதன் பின்புதான் பூத உடல் சிவத்திரவியமாகிய திருப்பொற்சுண்ணப் பொடி பூசிக் கொள்ளவோ, சிவாக்கினியால் தகிக்கவோ தகுதியுடையதாகின்றது. இதனால்தான் பூதவுடலுக்கு முதலில் சிவகும்ப தீர்த்த அபிஷேகம் செய்தல் வேண்டும் என்று முன்னோர்கள் குறிப்பிட்டு வைத்தார்கள். அவ்வாறு புனிதப்படுத்தி, சிவசம்பந்தத்தையுண்டாக்கிய பின்பு தான் சுண்ணப் பொடியை இடித்து, கும்ப தீர்த்தத்தில் கரைத்து, சரீரம் முழுவதும் தெளித்து விடுகின்ற முறை ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பிழையான செயல் என்று சொல்ல முடியாது. குளிப்பாட்டுவதற்காகத்தான் சுண்ணப்பொடி இடிப்பது குளிப் பாட்டுகின்ற பொருள் பரிசுத்தமானதா? திருப்பொற்சுண்ணப் பொடி பூசத் தகுதியுடையதா? என்பதை நாங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பூதவுடலை திருப்பொற் சுண்ணப் பொடி பூசத்தக்க தகுதிக்குக் கொண்டு வருதற்காகத்தான் முதலிலே சிவகும்ப தீர்த்தத்தினாலே அபிஷேகம் செய்வதாகும். அதன் மேல் அபிஷேகம் செய்த பாவனைக்காக கும்ப தீர்த்துடன் சுண்ணப் பொடியைக் கலந்து தேகம் முழுவதும் தெளித்து விடுகின்றார்கள். இது மிருத்ஸ்நானம் என்று பத்ததியிலே கூறப்படுகின்றது. சந்தியாவந்தன முறையில் பஸ்ம ஸ்நானம் என்ற ஒரு பகுதி வருகின்றது. அதாவது:- விபூதியினாலே ஸ்நானம் செய்த பாவனை. அதற்காக சிறிதளவு விபூதியைச் சிரசிலே போட்டுக் கொள்வதாகும். அதேபோல் திருப்பொற்சுண்ணப் பொடியை அபிஷேகம் செய்த பாவனையாகச் சரீரம் முழுவதும் தெளித்து விடுவதாகும். இதைப் பிழையானது என்று கருதக் கூடாது.

**சூர்ணோற்சவத்தைப் பற்றி சைவபூஷணம் கூறும் கருத்து :-**

சிவதீட்சையுடையவன் மரணமடைந்த பின்னர் அவனுக்கு சூர்ணோற்சவஞ் செய்தல் வேண்டும். மங்களத்திற்காகவே இக் கிரியை செய்யப்பட வேண்டுமென்று சிவாகமங்களிற் கூறப்பட்டிருக்கின்றது.

கர்த்தாவானவன் கழுத்திற்கு மேல் சௌரம் செய்து கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு வாதுளாகமம் கூறுகின்றது. முதலில் பிரேதத்திற்கு ஜலம், தைலம் முதலியவற்றால் ஸ்நானம் செய்து கட்டிலில் அல்லது பாயில் தெற்கே தலையாகப் படுக்க வைத்து வீபூதி தரித்தல் வேண்டும். அதன் பின் பிரேதத்திற்குக் கிழக்கிலே ஒரு வேதிகையும் அதற்குக் கிழக்கே ஒரு வேதிகையும் அதற்குக் கிழக்கே ஒரு வேதிகையும் அதற்குக் கிழக்கே ஒரு வேதிகையுமாக மூன்று வேதிகைகள் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். முதல் வேதிகையில் கும்பமும், இரண்டாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதிகையில் உரல் உலக்கையும், மூன்றாவது வேதிகையில் பேரியும் வைத்தல் வேண்டும். கும்பத்தினுடைய நான்கு பக்கங்களிலும் கிழக்கு முதற் கொண்டு முறையே அப்பிரதட்சணமாக வீபூதி, கௌபீனம், தாம்பூலம், தைலம் இவைகளை ஸ்தாபிக்க வேண்டும். கும்பத்தில் பாசுபதாஸ்திர தேவரை ஸ்தாபித்தல் வேண்டும். இந்த முறையின்றிச் செய்யின் பலன்தராது. இவ்வாறு செய்வதற்குக் காரணம் காரணாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. கும்ப பூசை முடித்து பேரிதாடனம் செய்தல் வேண்டும். பேரிதாடனம் முடித்து உரல், உலக்கை பூசை செய்தல் வேண்டும். பூசை முடித்து எண்பத்தொரு பதமந்திரங்கள் கூறி ஆசாரியரும் கர்த்தாவும் மூன்று முறை பொடி செய்தல் வேண்டும். அதன் பின் தமிழ் மறையை (திருமுறை) ஓதி உத்தாபனஞ் செய்து கும்ப ஜலத்தால் பிரேதத்திற்குப் புரோக்ஷணஞ் செய்தல், தைலம், மஞ்சட்பொடி இவைகளையிடுதல் முதலியவற்றைச் செய்ய வேண்டும். இவையனைத்துஞ் சூர்ணோற்சவமாகும். இதிலிருந்து நாம் அறிந்து கொள்ளத்தக்கது பிரேதத்தை முதலிலே தைலம், ஜலம் இவைகளால் ஸ்நானம் செய்துகொள்ள வேண்டும். அதுதான் பிரேதசுத்தி. அதன் பின்பு பிரேதத்தை வைத்துத்தான் சுண்ணமிடித்தல் வேண்டும். பிரேதத்திற்குக் கிழக்குத் திசையிலே கும்பம், உரல், உலக்கை, பேரி இவைகளை வைத்துப் பூசிக்க வேண்டும். இதில் சுண்ணம் இடித்த பின்னர் பிரேதத்திற்குக் கும்ப ஜலம் முதலியவற்றால் அபிஷேகம் செய்தல் வேண்டும் எனக் கூறுகின்றார்.

மேலும் அகோரசிவாச்சாரியார் அருளிய அபரக்கிரியா விதியிலே 11ஆம் பக்கத்தில் ம்ருத்ஸ்நானம்:- முன்னே பூதவுடலுக்கு எண்ணெய், அறுகு, அக்ஷதை, தாம்பூலம் கௌபீனம் (உடுப்பு), சூர்ணோற்சவ மஞ்சட்பொடி சாத்தி, பின்பு பக்த சனங்களுக்கு விதிப்படி கொடுக்க என்பதாகும்.

ஓர் உதாரணம்:- நாம் காலையில் எழுந்தவுடன் கால் முகம் கழுவிய பின்புதான் சிவசின்னமாகிய விபூதியை அணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றோம். எம்மை முதலிலே பரிசுத்தப்படுத்திய பின்பு தான் சிவசின்னமாகிய விபூதியை அணிய வேண்டுமென்பதாகும். இதே போன்று சீவன் பிரிந்த உடல் சவம் ஆகிறது. அந்தச் சவத்தைச் சிவமாக்கி அதன்மேல் தான் சிவசின்னங்களாகிய விபூதி, திருப்பொற்சுண்ணப் பொடி முதலியவைகளைச் சாத்துதல் முறையாகும்.

திருப்பொற்சுண்ணம் இடித்து முடிந்த பின்பு நீராஞ்சனம் செய்து வழிபாட்டை நிறைவு செய்த பின்பு உலக்கையைக் கீழே வைத்தல் வேண்டும். பின்பு கர்த்தாவானவர் உரலினுள்ளே இருக்கின்ற சுண்ணப் பொடியை ஒரு பாத்திரத்திலே எடுத்து கும்ப தீர்த்தத்தையும் சேர்த்துக் குழைத்துத் தான் நெற்றியிலே அணிந்து கொண்டு பூத உடலினது இரண்டு கண்களிலும் சாத்தி மிகுதியைச் சரீரம் முழுவதும் தெளித்து விடவும். இது மிருத்ஸ்நானம் எனப்படும். ஆசாரியர் உரல் உலக்கைகளில், முன்னர் பூசித்த தேவர்களை யதாஸ்தானம் செய்து விடவும்.

பின்பு இறந்தவரது ஆன்மா நல்லகதியை அடைவதற் காகவும், பூதவுடலை மயானத்துக்குக் கொண்டு செல்வதற்காகவும் தசதானங்களையும், யாத்திரா தானங்களையும் செய்தல் வேண்டும். பின்பு கர்த்தாவானவர் குருவுக்குத் தெட்சணை கொடுத்து திருப்தியாக அனுப்பி வைக்கவும்.

**வாய்க்கரிசி போடுதல் :**

சுற்றத்தவர்கள் எழுந்து இடப்புறமாகச் சுற்றி வந்து காசும், அரிசியும் சேர்த்து பூதவுடலினுடைய வாயிலே போட்டுத் தங்களது இறுதிக் கடமையைச் செய்து கொள்வார்கள். மனைவி, பிள்ளைகள் பூக்கொண்டு இடப்புறமாக மும்முறை சுற்றி வந்து பாதங்களில் பூவைப் போட்டுத் தங்களது இறுதி வணக்கத்தை முடித்துக் கொள்வார்கள். மனைவி தனது மாங்கலியத்தினைக் கழற்றிப் பூதஉடலிற் போட்டுத் தனது இறுதி வணக்கத்தைச் செய்து கொள்ளுதல் வேண்டும். சுமங்கலிப் பெண் இறந்திருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத உடலைத் தகனத்துக்கு எடுத்துச் செல்லுமுன்பு அவனது கரத்தில் தானியம், பூரணகும்பம், தீபம் ஆகிய மங்கலப் பொருட்களைக் கொடுத்து வாங்கி வீட்டினுள் கொண்டு போய் வைத்தல் வேண்டும். பின்பு வாழைப்பழம், தாம்பூலம் முதலிய மங்கலப் பொருட்களை முந்தானைச் சேலையில் முடிந்து விடவும்.

**பூதவுடலைக் கட்டுதல் :**

பூதவுடலின் மேல் போடப்பட்ட சீலையால் முகத்தை மூடி கீழாக விரிக்கப்பட்ட சீலையைத் தலைப்புறத்து ஒரு முடியும், கால் புறத்து ஒரு முடியும் போட்டு, நடுவில் குறுக்காகப் போடப் பட்டிருக்கும் மூன்று சீலைத்துண்டுகளாலும் மூன்று இடங் களிலேயும் கட்டி விடல் வேண்டும்.

**மயானம் கொண்டு செல்லுதல் :**


கர்த்தா குடத்தை முன் கொண்டு செல்ல பின் பூத உடலைக் கொண்டு செல்லுதல் வேண்டும். சிவாக்கினியை முன்னே கொண்டு செல்ல, பறைகொட்டு முழக்கத்துடன் பந்து ஜனங்கள் பின்னேவர கொண்டு சென்று மயானத்தை அடைந்து தெற்கே சிரசாக இறக்குக. இறக்கும் பொழுது தலைப்பக்கம் முதலில் இறக்கிப் பின்பு கால்பக்கம் இறக்குக.

மயானத்திலே வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அதன் மேலே பிரேதத்தை வைத்து சுற்றத்தவர்கள் எல்லோரும் வாயக்கரிசி போடுதல் வேண்டும். பின்பு கர்த்தாவானவர் தான் கொண்டு வந்த கும்பத்துடன் சிதையை ஒரு முறை இடப்புறமாகச் சுற்றி வந்து தலைப்புறத்திலே குடத்தை இறக்கி வைத்து அதனது வாய்ப்புறத்தை உடைத்து எடுத்துவிட்டு அதனுள் அரிசி, காசு இவைகளையிட்டு கர்த்தாவானவர் எடுத்து இறந்தவரது வாயிலே போடவும். இவ்வாறு மூன்று முறை போட்டபின்பு குடத்தையும் கொள்ளியையும் தாங்கி இடப்புறமாக சிதையை மும்முறை சுற்றி வரவும். ஒவ்வொரு சுற்றிலும் குடத்தில் துவாரம் செய்து அதனால் ஒழுகும் நீரினால் சிதையை நனைக்கவும். மூன்றாவது முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேஷ்டி மண்டபம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேஷ்டி மண்டப விளக்கம்

1 பஞ்சகௌவியம்
2 சிதாஸ்தானம்
3 வர்த்தனி கும்பம்
4 திரிசூலம்
5 கதை
6 துவசம்
7 பாசம்
8 கட்கம்
9 தண்டு
10 சக்தி
11 வச்சிரம்
12 பத்மம்
13 சக்கரம்
14 சிவ கும்பம்
15 அக்கினி குண்டம்

## 2 சிதாஸ்தான (ம்) மேடை

| | | | | |
|---|---|---|---|---|
| கறுப்பு | கறுப்பு | சிகப்பு | பச்சை | பச்சை |
| கறுப்பு | கறுப்பு | மஞ்சள் | பச்சை | பச்சை |
| வெள்ளை | மஞ்சள் | மஞ்சள் | மஞ்சள் | மஞ்சள் |
| வெள்ளை | வெள்ளை | மஞ்சள் | சிகப்பு | சிகப்பு |
| வெள்ளை | வெள்ளை | கறுப்பு | சிகப்பு | சிகப்பு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிவந்து தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று பின்புறமாக கொள்ளியை வைத்து குடத்தைப் போட்டு உடைக்கவும். பின் கால் மாட்டிலே சென்று சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யவும். பின்னர் திரும்பிப் பாராமல் நீர்க்கரைக்குச் சென்று ஸ்நானம் செய்து அந்த இடத்தில் தற்பையைப் பரப்பி தெற்கு முகமாக நின்று நீவாபாஞ்சலி செய்து கொள்ளவும். நீவாபாஞ்சலியாவது - பிதுர் தர்ப்பணம்.

**அந்தியேஷ்டி :**

அந்தியேஷ்டி என்பது கடைசியான யாகம். ஆன்ம சுத்திக்காக அந்தியேஷ்டி செய்யப்படும். இதனால் சமய அனுட்டானத்திலே நேர்ந்த குறைகள் தீரும். மயானத்திலே (சுடலையிலே) பந்தரிட்டு முறைப்படி மண்டபம் அமைக்கப்படல் வேண்டும். அல்லது நீர்க்கரையிலும் மண்டபம் அமைத்துச் செய்யலாம்.

**அந்தியேஷ்டி மண்டபம் அமைப்பு :**

வசதியான இடத்தைத் தெரிந்து எடுத்துச் சுத்தப்படுத்துதல் வேண்டும். பின்பு சதுரமாக நான்கு கால் நாட்டி பந்தரிட்டு, மேலே வெள்ளைகட்டி, வாழைகள் நாட்டி, மாவிலை, தோரணங்களைத் தூக்கிக் கொள்ளுதல் வேண்டும். மண்டபத்தைக் கோமயத்தினாலே மெழுகிக் கொள்ளுதல் வேண்டும். வடக்கு, தெற்கு, கிழக்கு மேற்காக நான்கு நான்கு கோடுகள் வகுத்து ஒன்பது பாத்திகளாகச் செய்து கொள்ளுதல் வேண்டும். நடுப் பதத்திலே ஒரு முழச் சதுரத்தில் ஒரு மேகலையோடு கூடிய குண்டமொன்று செய்து கொள்ளுதல் வேண்டும். வடமேற்குத் திக்கில் சிவ கும்பம் வைப்பதற்காக ஒரு வேதிகையும், வடகிழக்குத் திக்கில் வர்த்தனி கும்பம் வைப்பதற்காக ஒரு வேதிகையும், தென்மேற்குத் திக்கில் பஞ்சகௌவியம் வைப்பதற்கு ஒரு மேடையும், தென்கிழக்குத் திக்கில் பூதவுடல் தகனத்துக்காக சிதாஸ்தானம் அமைப்பதற்கு ஒரு மேடையும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிதாஸ்தான மேடை :**

வடக்குத் தெற்காக நீள்சதுரமாக இருபத்தைந்து பாத்திகள் கொண்டதாக இருத்தல் வேண்டும். சிதாஸ்தானத்தின் நடுப்பதம் ஐந்திலும் மஞ்சள் மாவும், தென்மேற்கு மூலையின் நான்கு பதத்திலும் வெள்ளை மாவும், தென் கிழக்குத் திசையில் சிவப்பு மாவும், வட மேற்குத் திசையில் கறுப்பு மாவும், வட கிழக்குத் திசையிலே பச்சை மாவும், வடக்கிலுள்ள ஒரு பதத்திலே சிவப்பு மாவும், மேற்கிலேயுள்ள ஒரு பதத்திலே வெள்ளை மாவும், தெற்கிலேயுள்ள ஒரு பதத்திலே கறுப்பு மாவும், கிழக்கிலேயுள்ள ஒரு பதத்திலே மஞ்சள் மாவும் இட்டுக்கொள்ளவும்.

**கும்பம் அமைக்கும் முறை :**

அழகு பொருந்த அமைத்த மண்டபத்திலே தென்மேற்கு மூலையிலுள்ள மேடையில் பஞ்சகௌவியத்தையும், வடமேற்கு மூலையிலுள்ள மேடையிலே சிவகும்பத்தையும், வடகிழக்கு மூலையிலுள்ள மேடையிலே வர்த்தனி கும்பத்தையும் அமைத்தல் வேண்டும். சிவகும்பத்தையும் வர்த்தனி கும்பத்தையும் நெல்லு முதலாகச் சொல்லப்படுகின்ற ஏழு தானியங்களை முறைப்படி பரப்பி அதன்மேல் கும்பங்களை அமைத்தல் வேண்டும். அதனுள் சுவர்ணம் (காசு) வாசனைத்திரவியங்கள் முதலியவற்றைப் போட்டுக் கொள்ளுதல் வேண்டும். அவற்றைச்சூழ எட்டுத் திக்குகளிலும், ஈசானத்திற்கு தெற்கிலும், நிருதிக்கு வடக்கிலுமாக பத்துத் திக்குகளிலும் பத்துக் கும்பங்களை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**கிரியை ஆரம்பம் :**

ஆசாரியர் ஸ்நானம் செய்து, நித்திய அனுட்டானங்களை முடித்துக் கொண்டு யாகசாலையினுள் வந்து கர்த்தாவை அழைத்து விபூதி கொடுத்து சங்கற்பம் செய்து கொள்ளவும். பின்பு சுகாசனத்தில் ஆசாரியர் இருந்து கொண்டு விபரீதமாக (சங்காரக் கிரமமாக) சகளீகரணம், பூதசுத்தி, அந்தர்யாகம் முதலியன செய்து சாமான்யார்க்கியம் கூட்டிப் புரோட்சித்து சிவகஸ்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து சிவோகம்பாவனை முடித்தபின்பு ஞானகட்கத்தினை (தர்ப்பையால் தலைப்பின்னலைப் போல் பின்னப்பட்ட ஞான வாளை) எடுத்து அஸ்திர மந்திரத்தினால் புரோட்சித்து ஏழு முறை அபிமந்திரித்து தனது இடுப்பில் கட்டிக்கொள்ளுதல் வேண்டும்.

**பஞ்சகௌவிய பூசை**

பஞ்சகௌவியத்தை முறைப்படி பூசித்து அபிமந்திரித்து தூபதீபம் காட்டிய பின்பு அந்தத் தீர்த்தத்தினாலே யாக மண்டபத்தையும் கர்த்தாவையும் பூதவுடலையும் புரோட்சித்தல் வேண்டும்.

**சிதாஸ்தான பூசை**

நடுப்பதம் ஐந்திலும் பிருதுவி தத்துவத்தையும் பிரமாவையும் பூசித்தும் தென்மேற்கு மூலையில் நான்கு பதத்திலே அப்பு தத்துவத்தையும் விஷ்ணுவையும் பூசித்து தென்கிழக்கு மூலையில் நான்கு பதத்திலும் தேயு தத்துவத்தையும் உருத்திரனையும் பூசித்து வடமேற்கு மூலையில் நான்கு பதங்களிலும் வாயு தத்துவத்தையும், மகேஸ்வரனையும் பூசித்து, வடகிழக்கு மூலையில் நான்கு பதத்திலும் ஆகாச தத்துவத்தையும் சதாசிவனையும் பூசித்து, வடக்கு, மேற்கு, தெற்கு, கிழக்கு ஆகிய திக்குகளில் உள்ள ஒவ்வொரு பதங்களிலும் குபேரன், வருணன், இயமன், இந்திரன் முதலிய தேவர்களையும் பூசித்து நிவேதித்து நீராஞ்சனம் செய்தல் வேண்டும். பின்பு சகல தேவர்களுக்கும் பலியிட்டுச் சந்தோஷப்படுத்தவும்.

**யாகேஸ்வரி பூசை**

யாகேஸ்வரி கும்பத்திலே ஷடுத்தாசன பூசை செய்து அதில் பாசுபதாஸ்திரத்தை முறைப்படி பூசித்து ஞானவாளை ஒப்புக் கொடுத்து யாகத்தைக் காத்து ரட்சிக்கும்படி வேண்டிக் கொள்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தசாயுத பூசை**

வடகிழக்குத்திசை முதலாகக் கிழக்குத்திசை முடியவுள்ள எட்டுத் திசைகளிலும் வைக்கப்பட்டிருக்கும் கும்பங்களிலே திரிசூலம் முதலாக வச்சிராயுதம் முடியவுள்ள எட்டு ஆயுதங்களையும், தென்மேற்குத்திசையின் வடபாலுள்ள கும்பத்தில் சக்கரத்தையும், வடகிழக்குத் திசையின் தென்பாலுள்ள கும்பத்திலே பத்மத்தையும் பூசித்து, வழிபாடு செய்து கொள்ளுதல் வேண்டும். இவர்கள் ஒவ்வொருவருக்கும் சிவஆஞ்ஞையைக் கூறுதல் வேண்டும். அதன் கருத்து: "திரிசூலம் முதலான ஆயுத தேவர்களே! உங்களது திக்குகளில் சாவதானமாகக் காவல் செய்து கொண்டிருங்கள் இது சிவபெருமானது கட்டளை" என்பதாகும்.

**யாகேஸ்வரன் (சிவகும்ப) பூசை**

ஆசாரியர் சிவகும்பத்துக்கு முன்பு இருந்து அர்க்கிய ஜலத்தினாலே புரோட்சித்து ஆதாரசக்தி தொடக்கம் சக்திபரியந்தம் அப்பிரதட்சணமாக (இடப்பக்கமாக) பூசித்து கும்பத்திலே சிவபெருமானை ஆவாகனம் செய்து பூசித்து வழிபாடுகளைச் செய்து கொள்ளவும். பின்பு குண்டத்திலே அக்கினியைப் பிரதிட்டை செய்து பூசிக்குக. பின்பு கும்பத்துக்கும் - அக்கினிக்கும் - தனக்கும் நாடீ சந்தானம் மூலம் தொடர்புபடுத்தி மூல மந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதிகளும் சங்கிதா மந்திரத் தினாலே பத்துப்பத்து ஆகுதிகளும் செய்து பூரணாகுதி செய்க.

**பூத உடல் சுத்தி**

பூத உடலின் கட்டுகளை அவிழ்த்துச் சிதாஸ்தானத்தின் பக்கலிலே தெற்கே சிரசாகக் கிடத்தவும். பூத உடலை பஞ்ச கௌவியத்தினாலும், கோமயத்தனாலும், விஷேட அர்க்கிய ஜலத்தினாலும் புரோட்சித்து திருநீறு சாத்தவும். பின்பு நிரீட்சணம் முதலிய சுத்திகளைச் செய்து பூத உடலின் இருதயத்திலே ஆசன பூசை செய்து ஆன்மாவை அதில் அழைக்கவும். பின்னர் அதற்காக மூன்று ஆகுதிகள் கொடுத்து பூத உடலிலே பஞ்சப் பிரம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரங்களைப் பதித்து அதன் இருதயத்திலே சிவனை ஆவாகனம் செய்து அந்த ஆத்மா அதில் நிலைத்தற்காக நூறு ஆகுதிகள் செய்க.

ஆசாரியர் பூத உடலுக்கும் தனக்கும் நாடீ சந்தானம் செய்து நித்தியானுஷ்டான குற்றங்கள் தீருவதற்காக மூல மந்திரத்தால் நூறு ஆகுதிகள் செய்க. அவர் சரீரத்திற்கு பிரவேசித்து ஆத்மாவைத் தம்மோடு சேர்த்துப் பின்னர் அதற்கு வெளியே வந்து அதைத் தம்முடைய இருதயத்துக்குக் கொண்டு போய்த் தம்மோடு ஐக்கியப்படுத்தி உருத்திரனைத் தியானித்துக் கொண்டு அதை வெளியே கொண்டுவந்து பூரணாகுதியோடு அக்கினியிற் சேர்த்து உருத்திரமூர்த்தியை அடையும் வழியில் விட வேண்டும். இது ஜீவன் சிவலோகத்தை அடைவித்தற்குரிய முதற்கிரியை ஆகும். பூத உடலின் இருதயத்திலே ஆசன பூசை செய்யு முன்பு முப்பத்தாறு தத்துவங்களையும் அதிபதிகளையும் பிரேதத்திலே பூசித்தல் வேண்டும்.

### மஹாஜாலப் பிரயோகமுறை

இறந்தவருடைய சரீரத்திலே ஜீவன் நியாசம் செய்வதற்காகப் பிரணவ மந்திரத்தை உச்சரித்தால் எழுந்த நாதத்தை, முஷ்டி முத்திரையினால் பிடித்து துவாதசாந்தத்திற்குக் கொண்டுபோய், அந்த நாதத்துடன் ஒற்றுமைப்பட்ட கைகளையுடைய ஆசாரியர், இறந்தவருடைய ஆன்மாவை அவர் செய்து கொண்ட கன்மங்களுக்குரியவாறு இங்குமங்கும் செல்லுகின்றதாகப் பாவனை செய்து வலைபோல் எங்கும் பரந்த நாதத்தின் சக்தியால் அதனைப் பிடிக்கப்பட்டதாகப் பாவித்து ஆன்ம மந்திரத்தை மிக்க சூக்குமமாக உச்சரித்து நாத ரூபமான சுட்டுவிரலை மூன்றுமுறை சுற்றி தூரத்திலுள்ள ஆன்மாவை அருகிலிருப்பதாகப் பாவித்து பெருவிரலடியில் கடைவிரல் முதலிய விரல்களைச் சேர்த்து அந்த ஆன்மாவைக் கிரகித்து அங்குச முத்திரை செய்துகொண்டு இருதய மந்திரத்தால் தன்னுடைய இருதயத்தில் இழுத்துத் தன்னுடைய நாதத்திலிருந்தும் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவைப் பிரித்து, ஆன்ம மந்திரத்தை உச்சரித்து ஸம்ஹார முத்திரை செய்து கிரகித்து, பிராண பிரவாகத்தினால் வெளியில் வரச்செய்து, வெளியில் துவாதசாந்தத்தில் சேர்த்து, மீண்டும் கிரகித்து உத்பவமுத்திரை செய்து கொண்டு அவருடைய தேகத்திலே சேர்த்துவிடல் வேண்டும்.

பின்பு பலவகைப்பட்ட குற்றங்களும் நீங்குதற் பொருட்டு நூற்றெட்டு ஆகுதிகளைச் செய்து, சிவகும்பத்தைப் பூசித்து அதில் பூசிக்கப்பட்ட இறைவனை அக்கினியிலே சேர்த்து அஷ்டபுஷ்பம் சார்த்தி அந்த இறைவனையும் மற்றைய தேவர்களையும் உத்வாசனம் செய்க. அதாவது "தேவர்களே! நீங்கள் உங்கள் பதிகளுக்குச் சென்று வாருங்கள்" என விடை கொடுத்தல் ஆகும்.

**தகனம் செய்தல்**

சகல கிரியைகளும் நிறைவு பெற்ற பின்பு சிதையை வடக்குத் தெற்காக அடுக்கி அதன்மேல் சிதாஸ்தானத்தில் போடப்பட்டுள்ள வர்ணப் பொடிகளை அள்ளிக் கொண்டு போய்ப் போட்டுவிட்டு அதன் மேல் பூத உடலைத் தெற்கே சிரசாக வைக்கவும். இந்த இடத்திலே சுற்றத்தவர்கள் வாய்க்கு அரிசி போடுவார்கள். கர்த்தாவானவர் இறுதியாக ஆன்மா செய்கின்ற சிவலோக யாத்திரையிலே நற்பலன்கள் ஏற்படும் வண்ணம் தானங்களைச் செய்வர். அதன் பின்பு சிவகும்பத்தைக் கர்த்தாவானவர் எடுத்துக் கொண்டு சிதையை மூன்று முறை இடப் பக்கமாகச் சுற்றி வந்து தலைமாட்டிலே குடத்தை இறக்கி வைத்து அந்தக் குடத்தின் வாய்ப்பகுதியை உடைத்து எடுத்துவிட்டு அதனுள் காசு, அரிசி முதலிய பொருட்களைப் போட்டு கும்ப தீர்த்தத்துடன் காசு, அரிசி இவைகளை அள்ளி பூத உடலின் வாயில் மூன்று தரம் போடுதல் வேண்டும். கர்த்தாவானவர் இவ்வாறு வாய்க்கரிசி போட்டபின் மீண்டும் அந்தக் கும்பத்தைத் தோளிலே வைத்து வலக் கரத்திலே நெருப்புக் கொள்ளியைப் பின்புறமாகப் பிடித்துக்கொண்டு சிதையை மூன்று தரம் இடப் புறமாகச் சுற்றி வருதல் வேண்டும். ஒவ்வொரு தரமும் சுற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்ற பொழுது குடத்தில் துவாரம் செய்து அதன் வழியாகக் கும்ப தீர்த்தத்தால் சிதையை நனைத்தல் வேண்டும். குடத்திலே மூன்று முறை துளையிடவும். பின்பு கர்த்தாவானவர் தென்புறம் நோக்கியவாறு நெருப்புக் கொள்ளியைப் பின்புறம் தலைமாட்டிலே வைத்து முன்புறம் குடத்தைப் போட்டு உடைத்தல் வேண்டும். பின் திரும்பிப் பாராது நீர்க்கரையை அடைந்து ஸ்நானம் செய்து கொள்ளவும்.

ஆசாரியர் குண்டத்திலே உள்ள அக்கினியைக் கொண்டு வந்து தலைமாட்டிலே எரியச்செய்து நெய், தேன் முதலிய பொருட்களால் சிருக்குச் சிருவங்களை நிரப்பி மகா பூரணாகுதியைச் செய்யவும். சிருக்குச் சிருவங்களை வலமிடமாகச் சிதையிலே வைத்து விடவும்.

**பூரணாகுதி மந்திரத்தினது கருத்து :**

"ஓ பிரபுவான அகோர ருத்திரரே! காலத்தினாலேயே கொண்டுவரப் பெற்றதாயும் மந்திரங்களால் பரிசுத்தமாக்கிய பூத உடலைச் சார்ந்ததாயுமுள்ள இந்த உத்திருஷ்டமான ஆகுதியைத் தேவரீர் ஏற்றருள வேண்டும் என்பதாகும்".

பின்பு கர்த்தாவானவர் ஸ்நானம் செய்து ஜலக்கரையில் தர்ப்பையைப் பரப்பி மூன்று (நிவாபாஞ்சலி) தர்ப்பணஞ் செய்க.

நிவாபாஞ்சலி - பிதுர்தர்ப்பணம் (பிதிர்களின் திருப்திக்காகச் செய்வது)

பின்னர் சுற்றத்தவர்களுடன் வீடு வந்து தெருவாசலில் நின்று வேப்பிலையைத் தின்று ஆசமனம் செய்து அக்கினி, மண், கோமயம், வெண்கடுகு இவைகளைத் தொட்டு கல்லின் மேல் அடிவைத்துச் சென்று ஸ்நானம் செய்து கொள்ளவும். பின்னர் இறந்தவரை நினைத்து சிவனைப் பூசித்து ஆசௌசம் இல்லாதவரால் கொண்டுவரப்பட்ட உணவைத் தானும் சுற்றத்தவர்களும் (உரிமைக்காரரும்) அருந்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அஸ்தி சஞ்சயனம்**

அஸ்தி சஞ்சயனம் என்பது:- எலும்புகளை எடுத்தல் என்று பொருள்படும். இது முதலாம், இரண்டாம், மூன்றாம் நாட்களில் செய்யப்பட வேண்டும். அஸ்தி சஞ்சயனம் செய்யும் நாளை நியமித்துக்கொண்டு சுற்றத்தவர்களுக்கும் நாவிதனுக்கும், காடாற்றுவதற்கு வருமாறு அழைத்தல் வேண்டும். காடாற்றுவது என்பது:- சுடு காட்டில் நாம் மூட்டிய அக்கினியை நீரூற்றி ஆற்றுவது (அணைப்பது) என்பதாகும்.

காடாற்றுவதற்குரிய பொருட்களை ஆயத்தம் செய்து கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட வேண்டும். சுடுகாட்டை அடைந்து தலைமாட்டிலே வைத்தக் கர்த்தாவுக்குக் குருவானவர் சங்கற்பம் செய்து விநாயக பூசை, புண்ணியாக வாசனம், பஞ்சகௌவிய பூசை முதலியவைகளைச் செய்தல் வேண்டும். பின்பு புண்ணியாக வாசன பஞ்சகௌவிய தீர்த்தத்தினாலே புரோட்சித்து சிதையைச் சுத்தப்படுத்திச் சிதையிலுள்ள அக்கினியை எடுத்து தலைமாட்டில் வைத்து சுவாலிக்கச் செய்து அதில் சிவபொருமானைப் பூசித்து அஸ்திர மந்திரத்தால் நூறு ஆகுதிகள் கொடுத்து, முப்பத்தாறு தத்துவங்களையும், அதிபதிகளையும் பூசித்து அவற்றிற்கு மும்மூன்று ஆகுதிகள் கொடுக்கவும். பின் மகாபூரணாகுதியைச் செய்து அக்கினியை விசர்ச்சனம் செய்து கொள்ளவும்.

பின்பு கால்மாட்டில் இருந்து தலைப்புறமாகத் தண்ணீரை ஊற்றி அக்கினியைத் தணித்துக்கொள்ளவும். பின்பு கர்த்தாவினது கையினால் சங்காரக்கிரமமாக அபிஷேகங்களை முறைப்படி செய்வித்தல் வேண்டும். அபிஷேகம் நிறைவு பெற்றபின் பஞ்சப் பிரம மந்திரங்களைச் சங்காரக் கிரமமாகக் கூறி பாதத்திலிருந்து தலைவரைக்கும் ஐந்து இடங்களில் விபூதி, சந்தனம், பூ முதலியவற்றைச் சார்த்தி நீராஞ்சனம் செய்யவும். பின்பு கலசத்தினுள் பாலைவார்த்து முன் பூசித்த ஐந்து இடங் களிலிருந்தும் எலும்புகளை (ஆஸ்தியை) எடுத்து கலசத்தினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தல் வேண்டும். கலசம் நிரம்பிய பின் கோடிவஸ்திரத்தினாலே கலசத்தினது வாயை மூடிக்கட்டி கலசத்தை முக்காலிமேல் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும்.

பின்பு மிகுதியாகவுள்ள சாம்பலை வெடித்தாட்டு விடவும். பின்பு தகனித்த இடத்தைக் கொத்திப் பாத்திகளாகக்கட்டி நவதானியங்களை விதைத்து உழுது விடவும். பின் சுற்றத்தவர்கள் எல்லோரும் பால் தெளிக்க வேண்டும். பின்பு முருங்கை நாட்டி அதில் காற்பணமும், முழத்துண்டும் கட்டி விடவும். நிவேதியப் பொருட்களைப் படைத்து வெட்டிளநீர் வைத்து சூடம் ஏற்றி திருமுறைகள் ஓதி வழிபாடு செய்து கொள்ளவும். பின்னர் கலசத்தில் எடுக்கப்பட்ட அஸ்தியை கொண்டு போய்ப் புண்ணிய தீர்த்தத்திலே கரைத்து விடவும்.

**நக்கினப் பிரச்சாதானம் :**

நக்கினப் பிரச்சாதானம் என்றால் நக்கினதானம் என்று பொருள்படும். கர்த்தாவானவர் ஸ்நான அனுஷ்டானங்கள் முடித்துக்கொண்டு ஒரு நீர்க்கரையை அடைந்து ஒரு சிவப் பிராமணரை அழைத்து இறந்த ஆத்மாவின் பேரால் நக்கினப் பிரச்சாதானத்தைச் செய்வித்தல் வேண்டும்.

ஒரு குடத்தில் அரிசியை நிரப்பி அக்குடத்தைச் சுற்றி வஸ்திரத்தால் கட்டி, வெண்கலப் பாத்திரத்தில் நெய்யையூற்றி, குடும்பஸ்தராக உள்ள சிவப்பிராமணருக்கு பரமசிவனைத் தியானம் பண்ணிக்கொண்டு, தானமாகக் கொடுக்கவும். இது நக்கினப் பிரச்சாதானம் கொடுக்கும் முறையாகும். காமிகாகமத்திலே "தீக்ஷிதனாகிய இல்வாழ்வானுக்கு நக்கினப் பிரசாதானங் கொடுக்கவும். அது தகன முடிவிலே இறந்தவனைக் குறித்து வஸ்திரத்தோடும் அரிசியோடும் கொடுக்கற்பாலது" எனக் கூறப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாஷாணஸ்தாபனம் பூசை**

பாஷாண பூசையாவது : இறந்தவருடைய ஆன்மாவை ஒரு கல்லிலே பூசிப்பதாகும். இந்தப் பூசையினாலும் இதனோடு செய்யப்படும் கிரியைகளினாலும் ஆன்மாவானது சிவபதவியை அடையத்தக்கதாகின்றது. இந்தப் பூசையினால் இறந்தவருடைய ஆன்மாவுக்குத் திருப்தியும், மற்றும் கிரியைகளினாலே ஆன்மா செய்து கொண்ட குற்ற நிவர்த்தியும் உண்டாகின்றன. பூசைக்குச் செங்கட்டியைத்தான் வைத்தல் வேண்டுமென்று அகோர சிவாச்சாரியாரின் அபரக்கிரியை பத்ததியில் கூறப்பட்டிருக்கின்றது. தற்காலத்தில் பெரும்பாலும் கருங்கல்லைத்தான் எடுத்துக் கொள்ளுகின்றார்கள். மேலும் அந்தியேட்டி முடிந்தவுடன் அஸ்திசஞ்சயனம் முடித்து வீடு வந்து உடன் கல்லு வைத்து வழிபாடு செய்தல் வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. அது எல்லோராலும் செய்ய இயலாது. ஆதலினால் ஆசௌச முடிவு தினமான பன்னிரண்டாவது தினத்திலோ அல்லது பதினைந்தாவது தினத்திலோ கல்லுப்பூசை செய்கின்ற வழக்கம் உண்டு (பாஷாணம் - கல்லு)

பாஷாண ஸ்தாபன தினத்திலே கர்த்தாவானவர் ஸ்நானம் செய்து தனது சமய அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு புண்ணிய நதிக் கரையிலோ அல்லது இறந்த இடத்திலோ ஒரு மண்டபம் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதன் நடுவிலே விமானம் போன்ற ஒரு மேடையை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதன் மூன்று பக்கங்களையும் துணியால் மறைத்து வடக்குப் பக்கத்தினை வாயிலாக விட வேண்டும். அந்த மேடை மேலே ஏழு வகையான தானியங்களையும் இட்டு அதன் மேல் மண்குடத்திலே ஒரு கும்பம் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அந்தக் கும்பத்திற்கு வஸ்திரம் சாத்தி, கூர்ச்சம் மாவிலை, தேங்காய், மாலைகள் இவைகளைக் கொண்டு அலங்கரித்துக் கொள்ளுதல் வேண்டும். அதற்கு முன்பு முக்கோணமாக நிலத்திலே குழிதோண்டி அதன் மேலே மண்சட்டி ஒன்றை வைத்து அதனுள் ஒரு கல்லை இறந்தவருடைய ஆன்மாவாகப் பாவித்து வைத்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூசை**

கர்த்தாவுக்கு விபூதி கொடுத்து பவித்திரம் அணிவித்து, சங்கற்பம் செய்வித்துக் கொள்ளுதல் வேண்டும். பின்பு கர்த்தாவுக்கு இடமாக உபவீதம் அணிவித்துக் கொண்டு கிரியைகளை ஆரம்பித்துக் கொள்ளுதல் வேண்டும். முதலில் விநாயக வழிபாடு, புண்யாகவாசனம், பஞ்சகௌவிய பூசை முதலிய கிரியைகளைச் செய்தல் வேண்டும். பின்னர் ஆசாரியர் விபரீதமாக அதாவது சங்காரக் கிரமமாக கரநியாசம், அங்கநியாசம், சிவோகம்பாவனை முதலிய கிரியைகளைச் செய்து கொண்டு கும்ப பூசையைத் தொடங்க வேண்டும். இடப்பக்கமாக ஆசன பூசைகளை செய்து கும்பத்திலே உருத்திரனை ஆவாகனம் செய்தல் வேண்டும். உருத்திரனை முறைப்படி வழிபாடு செய்த பின்னர் கல்லிலே இறந்தவருடைய ஆன்மாவை ஆவாகித்து சகல உபசாரங்களையும் செய்தல் வேண்டும்.

பின்பு கல்லிலே பூசிக்கப்படுகின்ற ஆன்மாவுக்கு அபிஷேகம் முறைப்படி செய்து, வஸ்திரம் சாத்தி பூசை, தர்ப்பணம் முதலியன செய்து பிண்டம் இடுக.

**தர்ப்பணமும் தானமும் :**

தர்ப்பணம் என்பது திருப்திக்காகச் செய்யப்படுவது. இது இரண்டு வகைப்படும். ஒன்று வாஸோதகம். மற்றையது திலோதகம். வாஸோதகம் சீலையோடு சேர்த்துத் தர்ப்பணம் செய்வது. மற்றையது எள்ளோடு சேர்த்துத் தர்ப்பணம் செய்வது. தர்ப்பணம் முதல் நாளிலே மூன்று முறையும், அடுத்த நாளிலே ஒவ்வொன்று கூடவும் செய்யப்பட வேண்டும். தர்ப்பணம் செய்யும் போது தென்திசை நோக்கி மண்டி போட்டு இருத்தல் வேண்டும்.

**ஏகோத்தர விருத்தி :**

| | | |
|---|---|---|
| பிராமணர்களுக்கு | 10 நாள் ஆசௌசம் | 75 தர்ப்பணம் |
| க்ஷத்திரியர்களுக்கு | 12 நாள் ஆசௌசம் | 102 தர்ப்பணம் |
| வைசியர்களுக்கு | 15 நாள் ஆசௌசம் | 150 தர்ப்பணம் |
| சூத்திரர்களுக்கு | 30 நாள் ஆசௌசம் | 525 தர்ப்பணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ப்பணத் தொகையினளவாக ஏகோத்தரவிருத்திச் சிராத்தமும் அந்தந்தத் தினத்திலே செய்தல் வேண்டும்.

**பலன்**

இக்கிரியைகள் செய்வதனாலே இறந்த ஆன்மாவுக்கு பசி, தாகம், வெப்புத் தீரும். பசி தாகங்களாலுண்டாகும் அதிகமான துக்கத்தை அனுபவிப்பதே பிரேதத் தன்மையாகும்.

**நவ சிராத்தம்**

இது முதல் நாள் தொடக்கம் ஒற்றை நாட்களில் தகுதியுள்ள ஒருவருக்குத் தானமாகக் செய்யப்படுவது. இது இறந்த ஆன்மாவை நற்கதியிலே அடையப் பண்ணுவது. சிறந்த அந்தணரை அழைத்து இந்தத் தானத்தைக் கொடுத்து அவரிடமிருந்து தானபல தீர்த்தத்தை வாங்கி பாஷாணத்தில் விடவும். இப்படிச் செய்வதினாலே இறந்த ஆன்மாவுக்கு பிரேதத் தன்மை நீங்கி நற்பலன் உண்டாகின்றது.

**உருத்திர பலி:**

உருத்திர பலி சிவப்பிரீதியின் பொருட்டுச் செய்யப்படுவது. உருத்திரனைப் பூசித்து ஆன்மாவை உருத்திரனோடு சேர்ப்பதற்காக இக்கிரியை செய்யப்படுகின்றது.

**கும்பம் அமைத்தல் :**

ஒரு நீர்க்கரையிலே சுத்தம் செய்த இடத்தில் மண்டபத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். மத்தியிலே ஏழு தானியங்களையும் பரப்பி அதன் மேல் நடுவில் ஒரு கும்பமும், அதனைச் சுற்றிப் பதினொரு கும்பங்களும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். கும்பங்களை வாசனைத் திரவியங்கள் மாவிலை, கூர்ச்சம், மாலை, சரம், வஸ்திரம், சந்தனம், புஸ்பம் இவைகளால் அலங்கரித்துக் கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூசைமுறை**

ஆசாரியார் கர்த்தாவை அழைத்து விபூதி, பவித்திரம் கொடுத்து சங்கற்பம் செய்து ஆரம்பித்தல் வேண்டும். பின்னர் விநாயக வழிபாடு, புண்ணியாக வாசனம் முதலிய கிரியைகளைச் செய்து புண்ணியாக பஞ்சகௌவிய ஜலத்தினால் மண்டபத்தையும், கர்த்தாவையும் புரோட்சித்துக் கொள்ளுதல் வேண்டும். பின்பு ஆசாரியார் விபரிதமாகக் கரநியாசம், அங்கநியாசம், சிவோகம்பாவனை முதலிய கர்மங்களை நிறைவு செய்த பின்னர் கும்பபூசை தொடங்க வேண்டும். கும்பத்திலே ஆசன பூசைகளைச் செய்த பின்னர் நடுவிலுள்ள கும்பத்திலே மகாருத்திரனையும் மற்றைய கும்பங்களிலே பதினொரு உத்திரர் களையும் பூசித்து வழிபாடு செய்தல் வேண்டும். பின்னர் முறைப்படி அக்கினி காரியம் செய்து நாடீசந்தானமிட்டு ஆகுதிகளைச் செய்து பூரணாகுதி கொடுத்துத் தீபாராதனை செய்து கொள்ளவும். அதன்மேல் உருத்திரர்களுக்கும் பிதிர்களுக்கும் பலியிடவும் (பலிப் பொருட்கள்: சர்க்கரை, தேங்காய்த் துருவல், பச்சை அரிசி முதலியன) தர்ப்பணம் செய்து பின் விஷேட தீபாராதனையுடன் வழிபாட்டை நிறைவு செய்து கொள்ளவும். கர்த்தாவானவர் பூவும், நீரும் கொண்டு இடமாக மூன்று முறை சுற்றிவந்து "இறைவா இறந்த ஆன்மாவை நல்ல பதவியிலே உருத்திர பதத்திலே சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்" என்று கும்பத்திலே போட்டு வேண்டிக் கொள்ளவும். பின்பு கும்பமூர்த்திகளை உத்துவாசனம் செய்யவும். பின்னர் பலியை எடுத்துக்கொண்டு வந்து பாஷண கும்பத்துடன் வைத்துக் கொள்ளவும்.

**பிரபூத பலி :**

கல்லிலே பூசிக்கப்பட்ட ஆன்மாவுக்குச் சந்தோஷம் உண்டாகுமாறு, இறந்தவர் விரும்பி உண்டு வந்த சகல பொருட்களையும் படைப்பது, இதில் பெரிய அளவிலான சாதம், கறிவகைகள், பலகார வகைகள், பாயாசம், பழவகைகள் முதலியவைகளைப் படைத்து நைவேத்தியம் செய்து விஷேட பூசை வழிபாடுகளைச் செய்தல் வேண்டும். பின்பு பஞ்சபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுதல் வேண்டும். அதன் பின் இறந்தவர் மேல் பாடப்பட்ட கல்வெட்டு, சரமகவி முதலியவைகளைப் பாட வேண்டும். பின்பு சுற்றத்தவர்கள் பூவும், நீரும் இட்டு தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்தவும்.

**பாஷாண உத்துவாசனம்**

பின்னர் பாஷாணத்தில் (கல்லில்) பூசித்த ஆன்மாவை கும்பத்திலே சேர்த்து ஆன்மா நல்ல சிவபதத்தை அடைய வேண்டுமென்று வேண்டிக் கொண்டு கும்பத்தை உத்துவாசனம் செய்யவும். பின்னர் சுற்றமித்திரர்களுக்கு விபூதிப் பிரசாதம் கொடுக்கவும். பின்னர் கும்பம், பாஷாணம், பலிகொடுத்த பொருட்கள் ஆகியவைகளை எடுத்து ஒரு பல்லக்கிலே வைத்து வாத்தியம் முழங்க மக்கள் சூழ்ந்துவர எடுத்துச் சென்று புண்ணிய நதியிலே விடுக.

**விடுகின்ற முறை:**

புண்ணிய நதியிலே இறங்கி கழுத்தளவு தண்ணீரிலே சென்று வடக்கு முகமாக நின்று கும்பத்தை முன்பும் பாஷணம், பலி இவைகளைத் பின்னுமாக விடவேண்டும்.

**வீட்டைச் சுத்தப்படுத்தல்:**

பாஷாண உத்துவாசனம் முடிந்து யாவரும் சென்ற பின்பு வீட்டைக் கழுவிச் சுத்தப்படுத்தல் வேண்டும். எல்லோரும் ஸ்நானம் செய்து கொள்ளுதல் வேண்டும். அதன் மேல் அந்தணரை அழைத்து வந்து கிருகசுத்தி, புண்ணியாகவசானம் செய்வித்தல் வேண்டும். கிரியைகள் நிறைவு பெற்றபின் பஞ்சகௌவியம் அருந்திப் புண்ணியாக பஞ்சகௌவிய தீர்த்தத்தினை வீட்டின் உள்ளும் வெளியிலும் தெளித்து கிணற்றினுள்ளும் ஊற்ற வேண்டும். பின்பு அந்தணர் பெருமகனாருக்கு அரிசி, காய்கறி, தெட்சணை முதலிய பொருட்களை கொடுத்து வழியனுப்பி வைக்கவும். பின்பு தான் வீட்டில் சமையலை ஆரம்பிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரார்த்தம்

"சிரார்த்தம்" என்பது சிரத்தையோடு ஓமாதிகள் செய்து பிதா முதலியோர்களை உத்தேசித்துக் கிரியைகளைச் (பிண்டமிடுதல், தர்ப்பணம் முதலியவைகளை) செய்து அன்னதானம் கொடுப்பது சிரார்த்தம் எனப்படும். சிராத்தம் - சிரத்தையோடு செய்யப்படுவது.

கிருகஸ்தனாற் செய்யப்படும் தென்புலத்தார் வழிபாடு தெய்வந் தொழல், விருந்தோம்புதல் முதலிய தருமங்களுக் கெல்லாம் சிராத்தம், தர்ப்பணம் செய்தலாகிய தென்புலத்தார் வழிபாடே அவனுக்கு இன்றியமையாத சிறப்பு வழிபாடாகும். புத்திரராயினோர் தந்தை, தாய் முதலிய இறந்த தம் பிதிரர் பொருட்டு நித்தியர்களாகிய பிதிர் தேவர்களுக்குச் சிராத்தம் முதலிய தருமங்களைச் செய்யும் பெருங்கடமைப்பாடுடையவராவர்.

மைந்தனைப் பெறுகின்றது மாசிலாப்
புந்தியன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
வந்த மில்கட னாற்றுதற் கேயன்றோ?

எனக் கந்தபுராணம் கூறுகின்றது. தந்தை, தாய் இவர்களுக்கு அன்போடும், பக்தியோடும் சிராத்தம் செய்பவர்கள் நீண்ட ஆயுளையும், சுகத்தையும், நல்ல சந்ததிகளையும், சிவபெருமானது கிருபையையும் அடைவார்கள். அவர்களுக்கு தீவினைகளும், இடரும், வறுமையும் வந்து சேரா.

## சிராத்தஞ் செய்யுமிடம்:

தன் வீட்டிலாயினும், திருநந்தவனத்திலாயினும் மலையிலா யினும், புண்ணிய தீர்த்தக் கரையிலாயினும் திருக் கோயிலிலாயினும், குருவின் மனையிலாயினும் கோமயத்தினாலே சுத்தி செய்யப்பட்ட இடத்திலே சிராத்தஞ் செய்யக் கடவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காலம் :**

பிராதக் காலம், சங்கவ காலம், உச்சிக்காலம், அபரான்ன காலம், சாயான்ன காலம் என பகற் காலம் ஐந்து கூறாக வகுக்கப்படும். சூரியோதயம் முதல் ஆறு நாழிகை வரையும் பிராதக்காலமாகும். அதற்கு மேல் பன்னிரண்டு நாழிகை வரையும் சங்கவகாலமாம். அதற்கு மேற் பதினெட்டு நாழிகை வரையும் உச்சிக்காலமாம். அதற்கு மேல் இருபத்துநான்கு நாழிகை வரையும் அபரான்ன காலமாம். அதற்கு மேல் முப்பது நாழிகை வரையும் சாயான்ன காலமாம்.

அன்ன சிராத்தம் அபரான்னத்திற் செய்தல் வேண்டும். ஆமசிராத்தம் சங்கவகால்த்திற் செய்து அபரான்னத்திற் போசனம் செய்க. முற்பகலில் தேவகாரியங்களையும், அபரான்னத்திற் பிதிர் சிராத்தத்தையும் மத்தியானத்தில் ஏகோத்திட்டத்தையும் விருத்தி சிராத்தத்தையும் செய்க. விருத்தி சிராத்தம் (நாந்தி சிராத்தம்) இது மங்கள சிராத்தம் என்றும் கூறப்படும். இந்த சிராத்தம் பிதிர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறும் பொருட்டுச் செய்யப் படுவதாகும்.

**சிராத்த தினத்தில் செய்யத்தக்க வகைகள் :**

சிராத்த தினத்தில் திருக்கோயிலிலே அபிஷேகம், பூசை, திருவிளக்கு ஏற்றுதல் முதலியவைகளைச் செய்தல் வேண்டும்.

**செய்யத்தகாத கருமங்கள்**

நெற் குத்துதல், பிச்சையிடுதல், தயிர் கடைதல், நெய் முதலிய பொருட்களை வாங்குதல், கொடுத்தல் முதலியன சிராத்தம் நடக்கும் தினத்திலே செய்யத்தகாத கருமங்களாம்.

சிராத்தம் செய்யும் கர்த்தாவானவன் முதல் நாளும், அன்றும், மறுநாளும் சௌரஞ் செய்து கொள்ளுதல், பாரம் சுமத்தல், எண்ணெய் வைத்துக் கொள்ளுதல், இரண்டாம் முறை புசித்தல், காமமடைதல் முதலியவற்றைத் தவிர்த்து விரதசீலனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தல் வேண்டும். சிராத்த தினத்திலே கண்ணீர் விடுதல், கோபித்தல் துரிதப்படுத்துதல், பொய் சொல்லுதல், அன்னத்தைச் சிந்துதல், காலால் மிதித்தல், இலையிற்போடும் அன்னத்தை தூவிப் பரிமாறுதல் முதலியவைகளைச் செய்தல் கூடாது.

கண்ணீருடன் செய்யின் பிரேத சன்மங்களையும், கோபத்துடன் செய்யின் சத்துருக்களையும், பொய் சொல்லிச் செய்யின் நாய்களையும், அன்னத்தை மிதித்துச் செய்யின் இராக்கதர்களையும் அன்னத்தை தூவிப் பரிமாறிச் செய்யின் பாபிகளையும் அந்த சிராத்த பலன் சென்று அடைகின்றது.

**பாகஞ் செய்பவர்கள்:**

சமசாதியல்லாதவர்களும், சிவதீட்சை பெறாதவர்களும், நித்திய கரும ஒழுக்கங்களை விடுத்தவர்களும், ஆசாரம் இல்லாதவர்களும் சிராத்தத்திற்கு உபயோகமானவைகளைச் சிராத்தம் நிறைவேறுதற்கு முன் புசிக்க நினைப்பவர்களும் பாகஞ் செய்யும் பொழுது, வெற்றிலை பாக்கு உண்ணுதல் முதலிய குற்றமுள்ளவர்களும் ஆகிய இவர்களாலே சமைக்கப்பட்ட அன்னம் முதலியவைகள் பிதுர்களுக்குப் பிரீதியாக அவைகள் இராக்கதர்களுக்கே பிரீதியாகும்.

**சிராத்தத்திற்குரிய பொருட்கள் :**

சிராத்தத்திற்குரிய திரவியங்கள்: எள்ளு, நெல்லரிசி கோதுமை, சிறு பயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுநெய், பசுப்பால், தயிர், நல்லெண்ணெய், சிகைக்காய், அரப்பு, உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, இஞ்சிக் கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், புடலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலும்மிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலக்காய், சுக்கு, கராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி முதலியனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிரார்த்தத்துக்கு விலக்கப்பட்ட பொருட்கள்:**

கடலை, பீர்க்கங்காய், நீற்றுப்பூசனிக்காய், சுரைக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், முருங்கக்காய், வாழைப்பூ, வெண்காயம், வெள்ளைப் பூண்டு, கொவ்வையிலை, எருமைப்பால், தயிர், நெய், ஆட்டுப்பால் முதலியன.

**சிரார்த்தத்திற்கு உபயோகமாகும் பத்திர புஷ்பங்கள்**

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தை, எள்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியவைகளாம்.

**ஆசௌசம் வரின் செய்யும் விதி**

சனனாசௌசம் மரணாசௌசத்தினுள் சிராத்தம் வந்தால் ஆசௌசம் நிவர்த்தியாகும் தினத்திலே சிராத்தம் செய்தல் வேண்டும். விதவைதான் வீட்டுக்கு விலக்காயிருக்கும் போது தனது கணவனின் சிராத்ததினம் வந்தால் ஐந்தாம் நாளிலே சிராத்தம் செய்யலாம்.

சிராத்தத்திற்கு பாகம் (சமையல்) தொடங்கியபின் ஆசௌசம் வந்தால் அந்த சிராத்தம் முடியும் வரையிலும் அது கர்த்தாவைப் பற்றாது.

**சிராத்தம் மூன்று வகைப்படும். அவையாவன**

அன்ன சிராத்தம், ஆமசிராத்தம், இரணிய சிராத்தம் என மூன்று வகைப்படும்.

**அன்ன சிராத்தமாவது :**

அன்னம், எள்ளு, பானீயம், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் என்னும் பொருட்களைச் சேர்த்து தகப்பன், பேரன், பூட்டன் மூவரையும் உத்தேசித்து பிண்டமிடுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆம சிராத்தமாவது :**

எள்ளு, அரிசிமா, உழுந்து, பால், தயிர், தேன், நெய், வாழைப்பழம் என்னும் பொருட்களைச் சேர்த்து பிண்டமிடுவதாகும்.

**இரணிய சிராத்தமாவது :**

பொருட்கள் தேடிச்செய்ய முடியாத ஆபத்துக் காலத்திலே காசை (சொர்ணம்) மட்டும் வைத்துச் செய்வதாகும். அன்ன சிராத்தம் செய்து வருபவர்கள் அன்ன பிண்டத்தையே இடுதல் வேண்டும். ஆம சிராத்தம் செய்து வருபவர்கள் ஆம பிண்டத்தையே இடுதல் வேண்டும்.

ஆம சிராத்தத்திலே அன்ன பிண்டத்தையும் அன்ன சிராத்தத்திலே ஆம பிண்டத்தையும் இடுவது குற்றமாகும்.

பிதிர்க்காரியங்களுக்கு தக்ஷிணாக்கினியை வழிபாடு செய்து ஆகுதிகளை பிதிர்நாமங்களால் செய்க.

**தருப்பணம் :**

தருப்பணம் பிதிர்களின் திருப்திக்காகச் செய்யப்படுவது.

பிதிர் தருப்பணம் செய்கின்ற பொழுது இடது முழந்தாளை ஊன்றித் தென்திசையை நோக்கி இடது புறத்திலே தொங்கும் பூணூலை உடையவனாக இருந்து செய்வது முறையாகும்.

"தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்வார்
தெற்கும் மேற்கும், நோக்கியும்
கருமங்களைச் செய்வாராதலின்"

தர்ப்பண முடிவிலே "என்குல பிதிர்களே! பூமியில் விடப்பட்ட இந்த ஜலத்தினால் நீங்கள் நற்கதியையும் திருப்தியையும் அடையுங்கள்" என்று கர்த்தாவானவர் வேண்டுதல் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிராத்த கிரியை

சிராத்தம் நடைபெற இருக்கும் வீட்டின் முற்றத்தில் சாணத்தினால் மெழுகி பூரணகும்பம், தீபம், பிள்ளையார் முதலியவைகளை வைத்து வாசலில் மாவிலை தூக்கி ஆயத்தம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

### சங்கல்பம் :

கர்த்தாவுக்கு (இறந்தவருடைய மகன்) அல்லது கிரியை செய்ய இருப்பவருக்கு வீபூதி கொடுத்து அணியச் செய்து பவித்திரத்தை வலக்கை அணிவிரலில் போடும்படி கொடுத்து அதனோடு மூன்று கட்டைத் தருப்பையை மடித்துப் பிடித்து எள்ளைத் தொட்டு மும்முறை சிரசிலே குட்டி விநாயகரையும், குருவையும் வழிபாடு செய்து கொண்டு வலது முழந்தாளிலே பொத்தி வைத்துக் கொள்ளுமாறு செய்து சங்கல்பத்தைச் சொல்லவும்.

### சங்கல்ப மந்திரத்தினது கருத்து :

இன்ன வருட, அயன, ருது, மாத, பட்ச நட்சத்திர, திதியிலே இறக்கப்பெற்ற எனது பிதா அல்லது மாதாவுக்கு சிராத்தம் செய்யப் போகின்றேன் என்பதாகும். சங்கல்பம் முடிந்த பின் கட்டைத் தர்ப்பையை தெற்குத் திக்கில் போட்டு விடவும்.

### விக்கினேஸ்சுவர பூசை :

சாணியிலே பிள்ளையார் பிடித்து வைத்து அறுகம் புல் சாத்தி அதிலே விநாயகப் பெருமானை முறைப்படி பூசித்து வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் இவைகளை நிவேதித்து வழிபாடு செய்யவும்.

### தீபதேவி பூசை :

குத்துவிளக்கிலே தீப இட்சுமியை ஆவாகனம் செய்து விஷேடமாகப் பூசிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஞ்சகௌவிய பூசை :**

பஞ்சகௌவியம் என்பது பசுவினிடத்தில் இருந்து பெறப்படுகின்ற பால், தயிர், நெய், கோமயம், கோசலம் ஆகிய ஐந்து பொருட்களையும் ஐந்து பாத்திரங்களில் முறைப்படி ஸ்தாபித்து வழிபாடு செய்து குசோதகத்தோடு சேர்த்து பூசிப்பதாகும். ஒரே பாத்திரத்தில் மேற்படி ஐந்து பொருட்களையும் சேர்த்து பூசிப்பதும் உண்டு.

**வருண கும்ப பூசை :**

அரிசியைப் பரப்பி அதிலே ஒரு கும்பம் அமைத்து பூசிப்பது. கும்பத்திலே வருண தேவனையும் கங்கை முதலிய ஏழு தீர்த்தங் களையும் பூசித்து வழிபாடு செய்யவும். வழிபாடு முடிந்தவுடன் தேவர்களை உத்துவாசனம் செய்து கும்ப தீர்த்தத்துடன் பஞ்சகௌவியத்தைச் சேர்த்துப் புரோட்சித்தல் வேண்டும். இந்த புரோட்சணத்தினாலே தேகசுத்தி, ஸ்தலசுத்தி, திரவியசுத்தி உண்டாகின்றன.

**பஞ்ச கௌவிய பிராசனம் :**

பின்பு கர்த்தாவுக்குப் பஞ்சகௌவியத்தை அருந்தும்படி கொடுப்பது பஞ்சகௌவியம் அருந்துவதினாலே அகால மரணம் ஏற்படுவது தடைப்படும். சர்வவியாதியும் நிவாரணமாகும். சர்வ பாவங்களும் நீங்கும்.

**விக்கினேஸ்வரப் பிரசாதம் கொடுத்தல் :**

உடைத்து நிவேதித்த கண்தேங்காய்ப் பாதியிலே தாம்பூலம், பாக்கு, பழம் இவைகளுடன் பிள்ளையாரையும் வைத்து கர்த்தாவின் கையிலே கொடுப்பதனால் அவரது எல்லா விருப்பங்களும் நிறைவேறுகின்றது.

**சிராத்த அனுஞ்ஞை :**

ஒரு வாழையிலையில் மூன்று தர்ப்பை, பவித்திரம், எள்ளு, தாம்பூலம், உபவீதம், தெட்சணை (சில்லறைக்காசு) முதலியவைகளை வைத்து கர்த்தாவானவர் சிரசில் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது தோளில் வைத்து இடப்புறமாக மும்முறை (அப்பிரதட்சணம்) சுற்றுதல் வேண்டும். சுற்றிய பின்பு இன்ன வருட, அயன, ருது, மாத, பக்ஷ, நட்சத்திர, திதி, வாரம் கூடிய புண்ணிய சுபதினத்திலே எனது பிதா அல்லது மாதாவுக்கு சிராத்தம் செய்யப் போகின்றேன் அதற்கு அதிகாரம் தந்து அருள் செய்ய வேண்டுமென்று குருவினிடம் கொடுக்கவும். அவரும் அப்படியே அதிகாரம் தந்தோம்! என்று கட்டைத் தருப்பையைக் கொடுக்க அதனை வாங்கி இடுப்பில் சொருகிக் கொள்ளவும்.

**உபவீத தாரணம் :**

அதன் மேல் கர்த்தாவுக்கு உபவீதத்தைத் தரிக்கவும். (உபவீதம் என்றால் கிரியை செய்பவர் தோளில் அணிந்து கொள்ளும் பூனூல்)

**சூரிய பூசை :**

சிவந்த புஷ்பமும் நீரும் கொண்டு சென்று மூன்று முறை பிரதட்சணம் செய்து சூரிய பகவானைப் பார்த்து பகவானே! எனது பிதிர்களுக்கு சிராத்தம் செய்யப் போகின்றேன். நீங்கள் சாட்சியாக இருந்து அருள் செய்தல் வேண்டும் என்று வேண்டுதல் செய்து பூவையும் நீரையும் முற்றத்தில் இருக்கும் கும்பத்தில் போட்டு வேண்டுதல் செய்து கொள்ளவும்.

**கர்தா சங்கல்பம் :**

இன்ன வருட, அயன, ருது, மாச, பக்ஷ, நட்சத்திர, திதியும், வாரமும் கூடிய புண்ணிய தினத்திலே சிவகோத்திரத்திற் பிறந்து இறந்த என்னுடைய பிதாவை அல்லது மாதாவை உத்தேசித்து ஏகோத்தர விருத்தி, நவசிராத்தம், சங்கிதா சிராத்தம், இடபதானம் ஏகோத்திட்டம், மாசிகம், சோதகும்பம், சபிண்டீகரணம் என்னும் கிரியைகளை செய்யப் போகின்றேன். அந்தந்தக் கிரியைகளைச் செய்ய எனக்கு நல்ல தகுதி கிடைக்குமாறு அருள் செய்க என்று குருவிடம் வேண்டிக் கொள்ளவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகோத்தரவிருத்தி, பிண்டதானம், நவ சிராத்தம் இவை மூன்றும் பாஷாண உத்தவாசனத்தின் முன் செய்யப்படல் வேண்டும்.

**சங்கிதா சிராத்தம் :**

நேத்திர மந்திரம் ஒழிந்த பத்து மந்திரங்களைப் பத்துச் சற்பாத்திரர்களாகிய அந்தணப் பெருந்தகையாளரிடம் ஆவாகித்து அவர்களுக்குத் தானஞ் செய்வதாகும். இதனால் தீக்ஷை பெற்றுக் கொண்ட பின் ஆசாரத்தில் வந்த குற்றங்கள் நிவர்த்தியாகும்.

**இடபதானம் :**

பரமசிவனுக்கு நீல இடபம் விடுதலாகிய இடபோத்சர்ச்சனம் என்னும் கிரியையைச் செய்க என்று காமிகாகமம் கூறும். மற்றும் சிராத்தங்கள் அனைத்தும் செய்தாலும் சிவபெருமானைக் குறித்து இடபம் விடாராயின் பிசாசு ரூபம் அகலாது.

**நீல இடபம் என்பது :**

உடல் சிவப்பும், முகமும் முதுகும் சாம்பல் நிறமும், குளம்பும் கொம்பும் வெண்மை நிறமும் ஆக உள்ள இடபமாகும். நீல இடபம் விடும் முறை வைத்தியநாத தீக்ஷிதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

**இடபதான சங்கல்பம் :**

எனது பிதா அல்லது மாதா புண்ணியலோகத்தை அடைவதற்காகவும், பிசாசு ரூபம் அகலவும், பரமேஸ்வரனின் அனுக்கிரக பலத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காகவும் இடப தானத்தைச் செய்கின்றேன் என்பதாகும்.

நீல இடபத்தைக் கொண்டு வந்து வஸ்திர ஆபரணாதி களாலும், சந்தனம், குங்குமம், மாலைகளாலும் அலங்கரித்து முறைப்படி பூசித்து அதனது வலது பாதமூலத்திலே சூலமுத்திரை காட்டி பூசித்து தானம் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடபதானத்திற்கு (ஆண்மாடு) எருது கொடுக்க வசதி இல்லாதவர்கள் ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதிலே இடபத்தைக் கீறி அதன்மேல் தேங்காய் ஒன்றைவைத்து அதில் இடபதேவரை ஆவாகனம் செய்து பூசித்து வழிபாடு செய்த பின்னர் கர்த்தாவானவர் தமது இருகரங்களாலும் இடபதேவரைப் பற்றி ஒவ்வொரு திக்கிலும் கொண்டு சென்றதாகப் பாவித்து அதற்குரிய மந்திரங்ளைக் கூறி வழிபாடு செய்யவும். பின்பு அந்தணப் பெருமகனாரை அழைத்து பரமேஸ்வரனாகப் பாவித்து பூசித்து வஸ்திரம், அரிசி, காய்கறி வகைகள், தெட்சணை முதலியவைகளைத் தானமாகக் கொடுத்து முன்பே பூசித்த இடப தேவரையும் தானமாகக் கொடுத்து விடவும். (இந்த இடத்திலே ஒரு லட்சணம் நிறைந்த இடபத்தைத் தானமாகக் கொடுப்பது விஷேடமாகும்.)

**ஏகோதிட்டம் :**

ஒருவரை வரித்துச் செய்யப்படுவது ஏகோதிட்டமாகும். ஒரு அந்தணப் பெருமகனாரை அழைத்து வந்து மேற்கு முகமாக இருக்கச் செய்யவும். ஏகோதிட்டம் செய்யப் போகின்றேன் என்று அவரிடம் உத்தரவு பெற்றுக்கொள்ளவும். இறந்து போனவரை மந்திரத்தினாலே அழைத்து ஆசாரியாரிலே எழுந்தருளும்படி வேண்டிக் கொள்ளவும். அதன்மேல் அவருக்கு ஸ்நானம் செய்து கொள்வதற்கு நல்லெண்ணை, அரப்பு, எலுமிச்சம்பழம் இவைகளைக் கொடுத்து ஸ்நானம் செய்து கொண்டதாகப் பாவித்து சந்தனம், புஷ்பம், வஸ்திரம் (வேட்டிசால்வை) முதலியவைகளை சார்த்தி அரிசி, காய்கறி முதலியவைகளைக் கொடுத்துப் பூசிக்கவும்.

**பிண்டம் இடுதல் :**

தரையில் கோமயத்தினாலே ஒரு மண்டலம் செய்து அதில் தருப்பையை சத்தியோ சாத மந்திரத்தினால் தெற்கே அக்கிரமாக (நுனியாக) வைத்து அதில் ஒரு பிண்டம் இடுக. பிண்டம் இடும்பொழுது கர்த்தா தெற்கு முகமாக இடது முழந்தாளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடது கையையும் ஊன்றிக் கொண்டு இருந்து கைமாறி ஒரு பிண்டம் இடுக. பின்பு ஒரு பாத்திரத்திலே வலது கையை அலம்பி அந்த ஜலத்தாரையினால் அப்பிரதட்சணமாகப் பிண்டத்தைச் சுற்றி தெற்கே அந்தப் பாத்திரத்தைக் கவிழ்த்து விடவும். பிண்டத்தை முறைப்படி பூசிக்கவும். பழம், பாக்கு, வெற்றிலை, இளநீர், நைவேத்தியம் வைத்து பூசித்து தர்ப்பணம் செய்து அர்ச்சித்து நமஸ்கரித்துப் பொறுத்தருள வேண்டுமென்று விஞ்ஞாபிக்கவும். தனது சக்திக்கீடாக இருபத்திநான்கு தானங்களைக் கொடுக்கவும்.

**இருபத்து நான்கு தானங்களாவன :**

ஏகோதிட்டத்திற்கு 24 தானங்கள் உண்டு. அவை யாவன: பவித்திரம், யக்ஞோபவீதம் (பூணூல்), கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம் (சால்வை) வஸ்திரம், பொன், மோதிரம், ரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசானத்திற்கு வேண்டிய பொருட்கள், சர்வதானியங்கள், சர்வாலங்காரப் பொருட்கள், தாசீ, தாசர்கள் என்பனவாம்.

ஏகோதிட்டதானம் கொடுக்கின்ற பொழுது தானத்தை ஏற்கின்ற குருவை இறந்த பிதிராகப் பாவிக்கப்படுகின்றது. அந்த அந்தணர் ஒரு வருடம் முழுவதும் வேறு இடங்களுக்கு போகாமல் இருந்து சீவனம் நடத்தத்தக்கதாக, தானியங்களையும், பொருட்களையும், தெட்சணையையும் கொடுத்து தனது இறந்த பிதிரே அந்த அந்தணர் எனப் பாவித்து அவரை வழியனுப்பிய பின்பு இடத்தையும் தன்னையும் சுத்தப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மண் நிலமாக இருந்தால் கோமயத்தைக் (சாணத்தை) கரைத்துத் தெளிப்பதினால் சுத்தமாகும். சீமேந்து நிலமாக இருந்தால் மஞ்சள் நீர் தெளிப்பதினால் சுத்தமாகும். பின்பு கர்த்தாவானவர் ஸ்நானஞ்செய்து கொள்ள வேண்டும். குருவானவர் மீண்டும் சுத்தி புண்ணியாகவாசனம் செய்து பஞ்சகௌவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜலத்தினாலே புரோட்சித்து தன்னையும், கர்த்தாவையும், ஸ்தலத்தையும், திரவியங்களையும் சுத்தப்படுத்திக் கொள்ளுவார். கர்த்தாவின் ஆத்ம சுத்திக்காக பஞ்ச கவ்வியத்தை அருந்தும்படி கொடுப்பார்.

**சோத கும்ப சிராத்தம் :**

இறந்த ஆன்மாவின் பசி, தாகம் தீருவதற்காக ஒரு வருடம் முழுவதும் தனது சக்திக்குத் தக்கவாறு தீர்த்தம் நிறைந்த செம்போடு அரிசி, காய்கறிவகைகளையும் அந்தணர்களுக்குக் கொடுப்பது.

**மாசிக சிராத்தம் :**

இறந்த நாள் முதல் இருபத்தேழு நாளின் மேல் மூன்று நாட்களுக்குள் செய்யப்படுவது ஊன மாசிகம். நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்தாம் நாட்களுக்குள் செய்யப்படுவது திரை பக்ஷிக மாசிகம். நூற்றெழுபது நாளின் மேற் பத்து நாட்களுக்குள் (ஏழாம் மாசிகத்துக்கு முன்) செய்யப்படுவது ஊனஷாண் மாசிகம். முன்நூற்று நாற்பத்தைந்தாம் நாளின் மேல் பதினைந்து நாட்களுள் (ஆப்திகத்தக்கு முன்) செய்யப்படுவது ஊனாப்திக மாசிகம். இந்த நான்கு மாசிகங்களும் இரண்டாம் மாதம் முதற் பன்னிரண்டாம் மாதம் வரை இறந்த திதிகளிற் செய்யப்படும் பதினொரு மாசிகங் களுமாகப் பதினைந்து மாசிகங்கள் செய்யப்பட வேண்டியன. ஊன மாசிகம், திரைபக்ஷிக மாசிகம், ஊனஷாண் மாசிகம், ஊனாப்திக மாசிகம் என்னும் நான்கு மாசிகங்களையும் வாராதி தோஷங்கள் இல்லாத நாட்களிற் செய்க. வெள்ளிக்கிழமையிலும், நிருத்தை, சதுர்த்தி, அமாவாசை என்னும் திதிகளிலும், கேட்டை, பூரம், பூரட்டாதி, ஆயிலியம், மூலம், கார்த்திகை என்னும் நக்ஷத்திரங்களிலும் திரிபுஷ்கரயோகம், துவிபுஷ்பகரயோகம் என்பனவற்றிலும் செய்யலாகாது. மற்றைய பதினொரு மாசிகங் களையும் காலதோஷம் பாராது அவ்வத் திதிகளிற் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபிண்டீகரணம்:**

சபிண்டீகரணம் வருட முடிவில் இறந்த திதியிலே செய்தல் வேண்டும். கர்தாவானவன் ஒரு வருடம் வரையிலும் தனக்கு ஏற்படும் அசௌகரியங்களை உத்தேசித்து (தனது வாழ்நாள் நிலையில்லாதமையை உத்தேசித்து தனக்கு விதிக்கப்பட்ட ஆசௌச முடிவு தினத்தில் மாசிகம், சோதகும்ப சிராத்தம் இவைகளைச் செய்து பின் சபிண்டீகரணம் செய்க.) இவ்வாறு அகோர சிவாச்சாரியார் அபரக்கிரியா பத்ததியில் கூறப்படுகின்றது.

இதில் நான்கு பூசைகள் உண்டு. விசுவதேவர்களாகிய நந்தி மகாகாளருக்கும் பிதுர்த்தேவர்களாகிய கந்தர், சண்டர், கணாதீசருக்கும், சிவனடியார்களாகிய அதிதி அப்பியாகதருக்கும் ஆன்மாவாகிய நிமித்தருக்கும் பூசை செய்யப்படும்.

நந்தி மகாகாளர் இருவரும் விசுவதேவர் எனப்படுவர். கந்த, சண்ட, கணாதீசர் பிதுர் தேவர்கள் எனப்படுவர். இறந்த ஆன்மா நிமித்தர் எனப்படுவர்.

மேலே கூறிய நான்கு வகையாருடைய பூசையையும் ஏற்றுக் கொள்ள நால்வரையேனுனும் இருவரையேனும் நியமித்துக் கொள்ளவும். சபிண்டீகரணத்துக்கு வருபவர்களுக்கு சகல உபசாரங்களையும் செய்து தர்பாசனத்திலே இருக்கச் செய்க. விசுவதேவர்களும் அதிதி அப்பியாகதர்களும் கிழக்கு முகமாக இருத்தல் வேண்டும். பிதுர் தேவர்கள் வடக்கு முகமாக இருத்தல் வேண்டும். அவர்கள் முன் அர்க்கிய பாத்திரங்களை வைத்து தேவபாத்திரத்தில் நெல்லும், பிதிர் பாத்திரதில் எள்ளும் இட்டு உரிய மந்திரங்களினால் பூசித்து அவர்களுக்கு நல்லெண்ணை, அரப்பு, வஸ்திரம், அரிசி, காய்பிஞ்சு, தெட்சணை முதலியவை களைக் கொடுக்கவும். பின்பு அவர்கள் முன் கோமயத்தினால் மெழுகி தெற்கு நுனியாக தர்ப்பையைப் பரப்பி கர்த்தாவானவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு முகமாக இருந்து இடது முழந்தாளை ஊன்றி கையை மாற்றிப் பிண்டம் இடுதல் வேண்டும். பிண்டம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி முதல் வரிசையில் பிதுர் வர்க்கத்துக்கு மூன்றும் இரண்டாவது வரிசையில் மாதுரு வர்க்கத்திற்கு மூன்றும், மூன்றாவது வரிசையில் நடுவில் பிதுருக்கு ஒன்றுமாக ஏழு பிண்டங்கள் இடுதல் வேண்டும்.

பிதுர் தேவர்களின் மந்திரங்களினாலே முறைப்படி பூசிக்கவும். இறந்தவர் ஆணாகில் வேட்டியும் பெண்ணாகில் சேலையும் பிண்டத்துக்கு சாத்தவும். நைவேத்தியங்களை பிண்டத்திற்கு மேற்குத் திசையில் படைக்கவும். இளநீரை அடிப்பக்கம் வெட்டித் திறந்து நிவேதிக்கவும். இறுதியாக தாம்பூலம் நிவேதித்து விஷேட வழிபாடு செய்து திருமுறை ஓதவும். பின்பு தர்ப்பணம் செய்து தானங்கள் கொடுக்கவும். அதன்பின்பு சகல பிதிர் தேவர்களையும் உத்வாசனம் செய்து விடுக. பிண்டங்களை சமுத்திரத்திலே விடுக. அல்லது பசுவுக்குக் கொடுக்க.

**சாமானியார்க்கியதானம்**

நிமித்தரைக் கந்த, சண்ட, கணாதீசர் முதலிய பிதுர் தேவர்களோடு கூட்டும் பொருட்டு கால் கழுவி ஆசமித்து சகளீகரணம் செய்து சாமானியார்க்கியமைத்துக் கோமயத்தினால் மெழுகிய மண்டலத்திலே சுத்தமாகிய நான்கு பாத்திரங்களை வைத்து அவற்றுள் ஜலம், சந்தனம், பால், எள்ளு, தருப்பைநுனி, புஷ்பம் என்பவற்றையிட்டு முதல் மூன்று பாத்திரத்திலும் கந்த சண்ட கணாதீசரையும் நிமித்த பாத்திரத்திலே மூலமந்திரத்தோடு கூடிய தீக்ஷா நாமத்தையும் பூசிக்குக. அர்க்கிய தூபதீபாதிகளைக் கொடுத்து வழிபாடு செய்க. பின்பு நிமித்த பாத்திர ஜலத்தை வடக்கிலிருந்து மூன்று பாத்திர ஜலத்தோடு கலந்து விடுக. பின்பு உத்துவாசனம் செய்து விடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருஷ சிராத்தம் :**

வருடம் தோறும் இறந்த திதியிலே செய்யப்படும் சிராத்தம் வருஷ சிராத்தம் எனப்படும். வருடம் தோறும் இறந்தவரை உத்தேசித்து சிரத்தையோடும் விசுவாசத்தோடும் செய்யப்படுவது சிராத்தமாகும்.

**வருஷ சிராத்த கிரியை :**

சங்கல்பம், விநாயக பூசை, புண்ணியாக வாசனம், பஞ்சகௌவ்வியம், விசுவதேவர், பிதுர்தேவர், அதிதி, அப்பியாகதர் ஆகிய மூவகைத் தேவர்களையும் வழிபாடு செய்து அந்தணர்களுக்கு வஸ்திரம், போசனத்திற்குரிய அரிசி, காய்கறி முதலிய பொருட்களையும் தெட்சணையையும் கொடுத்தல் வேண்டும்.

**பிண்டம் இடுதல் (பிதிர் உணவு) :**

மகன் தந்தைக்குச் சிராத்தம் செய்யும் பொழுது பிதிர், பிற பிதிர், விறுத்தப் பிறபிதிர் அதாவது தகப்பன், பேரன், பாட்டன் ஆகிய மூவருக்கும் மூன்று பிண்டங்களையும் தங்களது வம்சத்திலே உள்ள பிதிர்கள் எல்லோருக்குமாக ஒரு பிண்டத்தையும் இடுதல் வேண்டும்.

மகன் தாயாருக்குச் சிராத்தம் செய்யும் பொழுது தாய், தகப்பனுடைய தாய், பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கும் மூன்று பிண்டங்களும் தங்களது வம்சத்தில் உள்ளவர்களுக்கு ஒரு பிண்டமும் இடுதல் வேண்டும்.

மகன் தாயாருக்குச் சிராத்தம் செய்யும் பொழுது தந்தை உயிருடன் இருந்தால் தாயாருக்கு மட்டும் ஒரு பிண்டம் இடுதல் வேண்டும். மிகுதிப் பிண்டங்களை தந்தையாரே இடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாளயம்

**உத்தராயணம்:**

தை மாதம் தொடக்கம் ஆனி மாதம் முடிய உள்ள காலம் உத்தராயண காலமாகும். இது தேவர்களுக்கு பகல் காலமாகும்.

**தக்ஷிணாயனம்:**

ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் முடிய உள்ள காலம் தக்ஷிணாயன காலமாகும். இது தேவர்களுக்கு இராக் காலமாகும்.

தேவர்களுக்கு தை மாதம் சூரிய உதய காலமாகும். சித்திரை மாதம் உச்சிக் காலமாகும். ஆனி மாதம் அஸ்தமன காலமாகும். புரட்டாதி மாதம் இரவு பத்து நாழிகை தொடக்கமாகும். அதில் அபரபக்கமே சிறந்த மஹாளய பக்ஷம் எனப்படும். அதில் செய்யும் சிராத்தம் பிதிருக்கு இராப் போசனமாகும். எங்களுக்கு பகலில் போசனம் தவறினாலும் இரவில் கட்டாயம் போசனம் வேண்டும். அது தவறக் கூடாது. அவரவர் இறந்த திதியில் செய்யப்படும் சிராத்தம் மத்தியான போசனமாகும். மஹாளய சிராத்தம் இராப் போசனமாகும். ஆதலினாலே இறந்த திதியில் செய்யப்பட வேண்டிய சிராத்தம் தவறினாலும் மஹாளய பக்ஷத்தில் செய்யப்படும் சிராத்தம் தவறலாகாது.

இந்த மஹாளய சிராத்தம் செய்வதனால் இன்ன இன்ன பலன் உண்டாகும் என்பதனை சேது புராணம் விரித்துக் கூறும். ஆதலினால் நாம் எல்லோரும் மஹாளய சிராத்தத்தை தவறவிடாது செய்து வருதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிரியை செய்வதினால் ஏற்படும் பலன்கள் :**

1. சூர்ணோற்சவத்தினால் சரீர சுத்தி உண்டாகி சிவாக்கினி தீண்டத்தக்க பரிசுத்த நிலமை உண்டாகும்.
2. அத்தி சஞ்சயனத்தால் புண்ணிய தீர்த்த ஸ்நான பலனுண்டாகும். நக்கின தானத்தினால் லச்சை (வெட்கம்) அபிமானம் நீங்கும்.
3. அந்தியேட்டியினால் மந்திர, தந்திர, கிரியா லோபங்களால் ஏற்பட்ட குற்றங்களும் காலாதீதக் குற்றங்களும் நீங்கும்.
4. பாஷாண ஸ்தாபன உத்தியாபனத்தால் கல்லு மலைகளாய்க் கிடத்தல் ஒழியும்
5. நவசிராத்தத்தினால் பிரேதத் தன்மை நீங்கும். தாக உட்டணம் நீங்கிச் சரீரம் வளரும்.
6. எகோத்தர விருத்தியினால் தத்துவ அசைவுகளும் சரீர புஷ்டியும் உண்டாகும்.
7. சுரோத கும்பத்தினால் சுகவிருத்தியும் நற்குணமும் நல்ல அழகும் உண்டாகும்.
8. சங்கிதையினால் மந்திர சித்தி உண்டாகும்.
9. விருஷப தானத்தினால் பிசாசத்துவம் நீங்கும்.
10. ஏகோதிட்டத்தினால் பிரேதத்துவம் நீங்கும்.
11. மாசிகத்தினால் சரீரம் வளரும்.
12. சபிண்டியினால் சமான தேகம் உண்டாகும். சுவர்க்க பாதேயத்தால் சுவர்க்க வழியுண்டாகும்.

மேலும் செய்யப்படுகின்ற தான தரும பலன்களால் பெரும் பாபங்கள் நீங்கிப் புண்ணியப் பேறுகள் பலவும் உண்டாகும்.

## சமயி - புத்திரர் - சாதகர்

**சமயி என்பவர் :**

சமய தீக்ஷை பெற்றுச் சிவாகம விதிப்படி நித்திய கருமத்தை மாத்திரஞ் செய்பவர். அத்துடன் சிவாலயத் தொண்டு களையும் செய்து வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புத்திரர் என்பவர் :**

சமய தீக்ஷையும், விசேஷ தீக்ஷையும் பெற்று ஸ்நானம், தர்ப்பணம், சிவபூசை, அக்கினிகாரியம், சிவத்தியானம் ஆகிய இவைகளைச் செய்து அதிதிகளுக்கு அன்னமூட்டி ஆசாரியரும் சாதகரும் ஏவியதை அன்புடன் செய்பவர்.

**சாதகர் :**

சமயம், விஷேடம், நிர்வாணம் என்னும் மூன்று தீக்ஷையையும் பெற்று நித்திய கருமங்களையும், நைமித்திய கருமங்களையும் சிவாகம விதிப்படி பண்ணி ஆசாரியனை வணங்கி சிவபெருமானது திருவடியிலே மாறாது பக்திகொண்டு இருப்பவர்.

**ஆசாரியார் என்பவர் :**

மூவகைத் தீக்ஷையுடன் அபிஷேகமும் பெற்று நித்தியம், நைமித்தியம், காமிகம் என்னும் கருமங்களைத் தான் எப்பொழுதும் செய்து கொண்டு சாதகர், புத்திரர், சமயிகள் ஆகிய மூவகை மாணாக்கரையுங் கொண்டு அவரவர் அதிகாரானுகுணமாகிய கருமங்களைச் செய்விப்பவராகும். சமயிக்கும், புத்திரருக்கும் பிதிர்தேவர் - கந்தர், சண்டர், கணாதீசர், விசுவதேவர் நந்தி, மகாகாளர் என்போர் சாதகருக்கும், ஆசாரியருக்கும், பிதிர்தேவர், ஈசர், சதாசிவர், சாந்தர், விசுவதேவர் உருத்திரர், அநந்தர் முதலியோராவர்.

**பிதிர் தேவர்கள் :**

பிதிர் தேவர்கள் எப்பொழுதும் சிவத்தியானம் உள்ளவர் களாயும், பிரசித்தம் உள்ளவர்களாயும், பரிசுத்தர்களாயும் இருப்பர். இவர்கள் நாம் செய்யும் சிராத்த வழிபாட்டை ஏற்று சிராத்தம் செய்பவரது இறந்த ஆத்மா எந்தப் பிறவியை எடுத்திருந்தாலும் அவர்களுக்கு அந்தப்பலனைக் கொடுக் கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பிதிர் தேவர்களைப் பூசிக்க அவர்கள் அந்த வழிபாட்டை ஏற்று இறந்தவர்களுக்கு பிரயோசனப்படும் முறையிலே கொடுக்கின்றார்கள்.

இறந்தவர்கள் தாம் செய்துகொண்ட வினைக்குத்தக்கதாக தேவர்களாகப் பிறந்திருந்தால் பிதிர் தேவர்கள் நாம் செய்யும் சிராத்த வழிபாட்டை ஏற்று அவர்களுக்கு அமுதமாக உதவுகின்றார்கள். இறந்தவர்கள் அசுரராகப் பிறந்திருந்தால் அவர்கள் அனுபவிக்கும் போகங்களாக உதவுவர். இறந்தவர் பசுவாகப் பிறந்திருந்தால் அதன் உணவான புல், வைக்கோலாக உதவுவர்.

சமயிக்கும் புத்திரருக்கும் அதாவது சமய தீட்சை பெற்று சமய நெறியிலே வாழ்பவருக்கு பிதிர் தேவர்கள் கந்த, சண்ட, கணாதீசர் என்போரும் விசுவதேவர் நந்தி மகாகாளரும் ஆகும். இவ்வாறு ஒவ்வொரு நெறியிலே நிற்பவருக்கும் அதாவது சமயி, புத்திரர், சாதகர், குரு ஆகியோருக்கு பிதிர்தேவர்களின் பெயர்கள் வேறு வேறாக அமையும்.

இவ்வாறாக பிதிர்தேவர்கள் மூலம் சிராத்த பலன் ஆன்மாக்களுக்கு கிடைக்கின்றது என நூல்கள் கூறுகின்றன.

**தானம் செய்வதினால் உண்டாகும் பலன்கள்**

கோதானம் செய்வதனால் பாபங்கள் நீங்கிப் புண்ணியப் பேறு உண்டாகும்.

வைதாரணி கோதானத்தால் வைதாரணிய ஆற்றில் செல்கின்ற பொழுது ஏற்படும் வேதனை தீரும்.

பூமி தானத்தினால் நல்ல சுத்தமான இடம் கிடைக்கும்.

எள்ளுத் தானத்தினால் பல பாவங்கள் நீங்கி விஷ்ணுலோகம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் தானத்தினால் அளவிறந்த புண்ணியங்களும், ஆபரணங்களும் உண்டாம்.

நெய் தானத்தினால் தாகம் தீரும்.

வஸ்திர தானத்தினால் குளிர், காற்று, வெய்யில், பனி முதலியவற்றால் வருந் துன்பம் நீங்கிப் பெருமையும், அபிமானமும் உண்டாம்.

தானிய தானங்களினால் பலவித தானியப் பேறு முதலிய சுகமுண்டாம்.

சர்க்கரைத் தானத்தினால் சுகபோசன முதலிய நன்மை யுண்டாம்.

வெள்ளிதானத்தினால் ஏழுவகை லோகாதி சுகமுண்டாம்.

உப்புத்தானத்தினால் அறுசுவைப் போசன சுகமுண்டாம்.

நவரத்தினாதி தானங்களினால் நவக்கிரகானுக்கிரகம் முதலிய சுகம் உண்டாகும்.

சிவலிங்கம், விபூதி, உருத்திராக்கம், சாளக்கிரமம் முதலிய தானங்களினால் சிவஞானசித்தி முதலிய நன்மை உண்டாகும்.

பிதிர்களுக்குச் சிராத்தம் செய்பவர்கள் நீண்ட ஆயுளையும், சுகத்தையும், நற்சந்ததியையும், சிவபெருமானுடைய கிருபையையும் அடைவார்கள். அவர்களை விட்டு தீவினையும், வறுமையும், இடரும் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியக் கிரியைகளின் அவசியம்

அந்தியேஷ்டியோடு கூடிய அபரக்கிரியைகளெல்லாம் இறந்தவர் சிவபதம் அடைவதற்கு ஏதுவாய் இருப்பதினால் தாய் தந்தையர் முதலாயினோருக்குப் புத்திரர் முதலாயினோர் சிரத்தையோடு தவறாது தம் பொருள் வசதிக்கு ஏற்ப அபரக் கிரியைகளைச் செய்தல் வேண்டும்.

அபரம் என்பது பிந்தியது என்பது பொருள். அதாவது இறந்த பின்பு செய்யப்படும் கிரியை அபரக்கிரியையாகும். தாய் தந்தையர் உயிரோடு இருக்கும் பொழுது அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து பாதுகாத்து வழிபடுதலும், அவர்கள் இறந்த பின்னர் சிரத்தையோடு அபரக்கிரியைகளைச் செய்து வழிபடுதலும் புத்திரர்களுடைய தலையாய கடமையாகும்.

**அபரக்கிரியை :**

ஒருவர் மரணமான பின்பு அவரைக் குறித்துச் செய்யப்படும் சூர்ணோற்சவம், அந்தியேட்டி, தகனம், அஸ்திசஞ்சயனம், பாஷாணஸ்தாபனம், உருத்திர பலி, சிராத்தம் முதலியனவாகும்.

அபரக்கிரியைகள் செய்யும் பொழுது இடப்புறமாக உபவீதம் அணிந்து கொள்ளுதல் வேண்டும். தூப, தீபம் காட்டும் பொழுது இடப்புறமாகக் காட்டுதல் வேண்டும்.

அபரக்கிரியைகளைச் செய்கின்றவரும், குருவும் இடமாக உபவீதம் தரித்துக் கொள்ளுதல் வேண்டும். கரநியாசம், அங்கநியாசம் செய்து கொள்கின்ற பொழுது சத்தியோசாதம் முதலாக பஞ்சப் பிரம மந்திரங்களை நியசித்தல் வேண்டும்.

## தனிஷ்டா பஞ்சமி சாந்தி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களிலும் மனிதர் மரணமானால் அந்த வீடு நாசமடையும். மாதா பிதாக்கள் இறந்தால் பின்னும் யாராவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பார்கள். தனம், தானியம் நாசமடையும். இந்தத் தோஷங்கள் நீங்குவதற்காகச் சாந்திமுறை கூறப்படுகின்றது. சகல சித்தியின் பொருட்டும், ஆயுள் விருத்தியின் பொருட்டும், ஐஸ்வரியம் உண்டாவதின் பொருட்டும் சாந்தி செய்து கொள்ளவும்.

அவிட்ட நட்சத்திரத்திற்கு வெண்கலப் பாத்திரம், சதய நட்சத்திரத்திற்கு எள்ளு, பூரட்டாதி நட்சத்திரத்திற்கு வஸ்திரம், உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு வெல்லம், ரேவதி நட்சத்திரத்திற்கு வெள்ளியும் தானம் செய்தல் வேண்டும்.

ச நட்சத்திரத்திரங்களில் இறந்த வீட்டில் மங்கள தீபம், பூரணகும்பம், பசு, ஜலம் இவைகளை ஒவ்வொரு நாளும் வைத்தல் வேண்டும். அந்த வளவு முழுவதும் எள்ளு, நவதானியம், நெற்பொரி முதலியன விதைத்தல் (தூவுதல்) வேண்டும். நீற்றுப் பூசினிக்காய் நேர்ந்து கட்டுவது, பஞ்சமி தோஷ நிவர்த்திக்காக நூல் கட்டுவது முதலியன தேச வழக்கிலுள்ளன.

**சாந்திமுறை :**

யமனை எருமை வாகனத்தில் இருந்த பாவனையில் செப்புத் தகட்டில் வரைந்து அதனை முறைப்படி பூசித்து தானம் செய்வது, அஷ்ட திக்குப் பாலகர்களைப் பூசித்து ஓமம் செய்வது, நவக்கிரக தேவர்களைப் பூசித்து கிரகசமித்து தானியங்களினால் ஓமம் செய்வது, நவக்கிரக தானம் செய்வது, இலட்சுமி தேவியைப் பூசித்து வேண்டுதல் செய்து கொள்வது முதலான சாந்தி முறைகள் அகோர சிவாச்சாரியார் அபரக்கிரியை வியாக்கியானத்தில் கூறப்படுகின்றது. (பக்கம் 231)

அந்தியேட்டி நடைபெற்ற அன்று இரவு வீட்டின் முன் முற்றத்தில் பந்தரிட்டு, வெள்ளைகட்டி, மகர தோரணத்தால் அலங்கரித்து, நிலத்தை மெழுகிக் கோலமிட்டு சாந்தியை ஆரம்பிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயக வழிபாடு, புண்ணியாக வாசனம், பஞ்சகௌவியம் இவைகளைச் செய்து பின்பு முறத்திலே (சுளகிலே) சிதாஸ்தான பதம் வரைந்து ஐந்து நிற மாவகைகள் இட்டு அதில் பஞ்ச தத்துவங்களைப் பூசித்து அரிசி மாவினால் செய்யப்பெற்ற பாவையை (ஆள் உருவத்தை) அல்லது தர்ப்பையினாலே செய்த புத்தளிகையை வைத்து "பிரேத தவக" முதலாகச் சொல்லப்படும் மந்திரங்களினால் ஆவாகனம் செய்து பூசிக்குக. பாவைகளில் அந்த அந்த நட்சத்திரங்களிக்குரிய மந்திரங்களைப் பூசித்தல் வேண்டும். பின் அக்கினி காரியம் செய்து அக்கினியில் ஆகுதி, பலி, பூரணாகுதி முதலியவைகளைக் கொடுத்து வழிபாட்டை நிறைவுபடுத்தவும். பின்பு சுளகுடன் பாவைகளை மயானத்திற்குக் கொண்டு சென்று அக்கினியினால் தகனம் செய்யவும். பின்பு காடாற்றி சாம்பல் எடுத்து நீர்க் கரையை அடைந்து நீரில் வடக்கு முகமாக நின்று சாம்பலை நீரில் கரைத்து, ஸ்நானம் செய்து அனுட்டானம் முடித்து வீட்டிற்கு வரவும்.

பின்பு வீட்டில் மண்டபம் அமைத்து சிவன் வர்த்தனியையும், மகாலட்சுமியையும், நவக்கிரக தேவர்களையும் முறைப்படி வழிபாடு செய்து கொள்ளவும். பின்பு கர்த்தாவுக்கு சிவன் வர்த்தனி கும்ப நீரினால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதன் பின்பு அந்தணர்களுக்கு முன் கூறிய பிரகாரம் தானங்களைக் கொடுக்கவும்.

**தானம் செய்ய வேண்டிய பொருட்களும் அளவுகளும் :**

வெண்கலம் ஐந்து பலம், எள்ளு இரண்டுபடி, வஸ்திரம் இரண்டு, வெல்லம் பத்துப்பலம், வெள்ளி ஒருபலம், பசு முதலாகப் பத்துத் தானமும் செய்க.

இவைகளைச் செய்வதினாலே அவமிருத்து தோஷம் நீங்கும். வீட்டில் இலட்சுமிவாசம் செய்வதால் அஷ்ட ஐஸ்வரியமும் பெற்று வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பஞ்சமி தோஷம் என்பது :**

அவிட்டம், சதயம் ஆகிய நட்சத்திரங்களுக்கு ஆறு மாதங்களும் பூரட்டாதி, உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களுக்கு மூன்று மாதங்களும் ரேவதி நட்சத்திரத்திற்கு ஒன்றரை மாதமும் தோஷமாகும் என நூல்கள் கூறுகின்றன.

## துர்மரணப் பிராயச்சித்த விதி

**துர்மரணம் என்பது :**

ஒருவர் இயற்கையாக மரணமெய்தாமல் திடீரென நீரினாலோ, தீயினாலோ, அரவந் தீண்டியோ, சூடு பட்டோ, வேறு விபத்துக்களாலோ இறந்தால் அல்லது தாமாகத் தற்கொலை செய்து கொண்டால் அது துர்மரணமெனப்படும். இவ்வாறு மரணமானவர்களது தேகத்தைக் கிரியை செய்யாது தகனஞ் செய்தல் வேண்டும்.

பின்பு ஆசௌசமுடிவு தினத்திலே மயானத்திலே அல்லது நீர்க்கரையிலே ஏகாதசர் (பதினொரு உருத்திரரையும் வைரவரையும் பூசித்து அரிசிமாவினாலே பலியிடுக.

**பலி மந்திரத்தினுடைய கருத்து :**

உருத்திரர்களே! மயான பூமியில் வசிக்கும் வைரவர்களே! பிசாசுகளே! எல்லோருக்கும் பிரீதியாக இந்தப் பலியை எடுத்துக் கொள்ளுங்கள். காலதேவனின் மகிமையினாலே பிசாசத்துவத்தை அடைந்திருக்கின்ற இந்த ஆத்மாவை விடுதலை செய்யுங்கள். அந்த ஆத்மா பிசாசத்துவத்தை விட்டு தேவத்துவம் ஆகட்டும் என்பதாகும்.

பின்பு இறந்தவரை உத்தேசித்து முப்பத்தாறு தர்ப்பையினாலே புத்தளிகை செய்து அவரது ஆத்மாவை ஆவாகனம் செய்து விதிப்படி அந்தியேஷ்டி செய்து நிர்மலமான பதவியிலே கூட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அந்தியேஷ்டி விதி பிரசித்தியாக சர்வாவஸ்தை களாலும் மரணமான பேருக்கு நானாவிதமான ஆகமாதி சித்தாந்த வசனப்படி அகோர சிவாச்சாரியார் இயற்றினார்.

மேற்காட்டியபடி அவமிருத்தாக இறந்தவர்களுக்கு ஆறு மாதத்தின் பின்பு அவர்கள் இறந்த திதி வருகின்ற பொழுது துர்மரணப் பிராயச்சித்தம் செய்து பலியிட்டு அதன்பின் புத்தளிகையில் அந்தியேட்டி செய்க.

துர்மரணமடைந்தவர்களுக்கு மோகத்தால் (ஆசையினால்) ஆறு மாதங்களின் முன் அந்தியேஷ்டி கிரியைகள் செய்வார்களானால் அவர்கள் நாசம் அடைவார்கள். இவ்வாறு அகோர சிவாச்சாரியார் அபரக்கிரியை வியாக்கியானத்திலே கூறப்படுகின்றது. (பக். 243) துர்மரணத்திலே அங்கங்கள் எல்லாம் துண்டுபடாமல் இருந்தால் ஆறு மாதத்தின் பின்பு இறந்த திதியிலே அந்தியேஷ்டி செய்க. அங்கங்கள் துண்டுபட்டு இல்லாமல் இருந்தால் ஒரு வருடத்தின் பின் இறந்த திதியிலே அந்தியேஷ்டி செய்க. இவ்வாறு சைவபூஷணம் (187) ஆம் பக்கத்தில் கூறப்படுகிறது.

**தருப்பையாலான தேகத்தைத் தகித்தல் (சுடுதல்)**

சிவதீக்ஷையுடையவருக்குச் சைவர் என்ற பெயருண்டு. சிவதீக்ஷையுடைய பிராமணரல்லாத ஏனைய மூன்று சாதியிலுள்ளவர்கள் விபூதி, உருத்திராக்கம் அணிந்து சிவ பூசையுடன் அந்தக்கரண சுத்தியுள்ளவராயும், இல்லறம் உடையவராயும், நிலைத்த நியமத்தையுடையவராயும், புலால் முதலியவைகளை உண்ணாதவராயும் இருப்பின் அவர்களுக்கு ஆசௌசம் பதினாறு நாளும், பதினைந்து நாளும் ஆகும். இவ்வாறு இரண்டு விதமாகக் காமிகாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு பதினாறு நாட்களிலும் பதினைந்து நாட்களிலும் பன்னிரண்டு நாட்களிலும் ஆசௌச நீக்கம் பெறுபவர்கள் மட்டும் இறந்தவுடன் தேகத்திலே அந்தியேஷ்டிக் கிரியை செய்வதற்குத் தகுதியுடையவர்களாவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றையோர் அதாவது சிவதீக்ஷைபெறாது சைவநெறி கடைப்பிடியாதவர்கள் இறந்த பொழுது அவர்களது தேகத்தைச் சிவமாக்கி சிவாக்கினியினால் தகித்தல் வேண்டும். பின்பு ஆசௌச முடிவு தினத்திலே தருப்பையினால் தேகத்தைச் செய்து அதில் இறந்தவருடைய ஆன்மாவை ஆவாகித்துப் பூசித்து சூர்ணோற்சவம் செய்தபின் அந்தியேஷ்டி செய்க. தருப்பையால் செய்யப்படும் உருவம் புத்தளிகை எனப்படும்.

**புத்தளிகை (பிரேத கூர்ச்சம்) செய்யப்படும் முறை :**

புத்தளிகை முப்பத்தாறு தருப்பைகளினால் செய்யப்பட வேண்டும். முப்பத்தாறு தருப்பைகளையும் சேர்த்து முறுக்கி இடப்புறமாகச் சுற்றி முடி போட வேண்டும். அக்கிரகம் (நுனி) நாலங்குலமும், முடிச்சு இரண்டங்குலமும் ஆக இருந்தல் வேண்டும். அது தலை அதன்கீழ் கழுத்து மூன்று அங்குலம். அதன்கீழ் ஐந்து ஐந்து தர்ப்பைகளினால் இரண்டு கைகளும், நடுவில் இருபத்தாறு தருப்பைகளினால் மார்பு, வயிறு, இடுப்பு, கொப்பூழ் இவைகளைச் செய்து பின்பு பதின்மூன்று பதின்மூன்று தருப்பைகளாகப் பிரித்துத் தொடை, முழந்தாள், கணுக்கால், பாதங்கள் இவைகளையும் செய்து கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு சைவபூஷணம் கூறுகின்றது. புத்தளிகையிலே (தருப்பையிலே) அந்தியேஷ்டி செய்பவர்கள் நீர்க்கரையிலே அல்லது மயானத்திலே மண்டபம் அமைத்துச் செய்தல் வேண்டும். அன்றைய தினமே தொடர்பாக மற்றையக் கிரியைகளையும் அதாவது அஸ்தி சஞ்சயனம், பாஷாண ஸ்தாபனம், உருத்திரபலி, பாஷாண உத்தியாபனம் முதலிய கிரியைகளையும் செய்தல் வேண்டும். பின்பு வீட்டை அடைந்து சிராத்தக் கிரியைகளையும் செய்தல் வேண்டும்.

இயற்கை மரணம் இல்லாது அவமிருத்தாக மரணம் அடைந்தவர்களுக்கும் அந்த அந்தக் கால எல்லையிலே தருப்பையினாலே புத்தளிகை (ஆளுருவஞ்) செய்து சூர்ணோற்சவம், அந்தியேஷ்டி, அஸ்தி சஞ்சயனம், பாஷாண ஸ்தாபனம் முதலிய கிரியைகளை முறையாகச் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய தீட்சை பெற்றுக்கொண்டவர்களுக்கு சமய அந்தியேட்டியும், விஷேட தீட்சை பெற்றுக் கொண்டவர்களுக்கு விஷேட அந்தியேட்டியும், நிருவாண தீட்சை, ஆசாரிய அபிஷேகம் பெற்றுக் கொண்டவர்களுக்கு அத்துவ சுத்தி அந்தியேஷ்டியும் செய்தல் வேண்டும். இதன் விபரம் அகோர சிவாச்சாரியர் அபரக் கிரியா விதியில் காணலாம்.

## மரண வீட்டில் அபரக் கிரியைகளைச் செய்வதற்கு வேண்டிய பொருட்களின் விபரம்

| | | |
|---|---|---|
| நெல்லு | பச்சை அரிசி | பயறு |
| உழுந்து | எள்ளு | தேங்காய் |
| தேங்காய் எண்ணெய் | விபூதி | சந்தனம் |
| குங்குமம் | அபிஷேகக் கூட்டு | மஞ்சள் மா |
| அரிசி மா | அபிஷேகத்திரவியம் | பன்னீர் |
| நெய் | தேன் | நல்லெண்ணெய் |
| அரப்பு | லவாந்தர் | அத்தர் |
| ஊதுபத்தி | சாம்பிராணி | தசாங்கம் |
| நெற்பொரி | நவதானியம் | கழிநூல் பந்து |
| பஞ்சவர்ண நூல் | விளைவு சூடம் | சமித்துக்கட்டு |
| பட்டுத்துண்டு | குருக்கள் வேட்டிசால்வை | கும்ப வேட்டி 1 |
| முட்டி 2 | சட்டி 2 | செம்பு 13 |
| குடம் 1 | குத்துவிளக்கு | உரல்,உலக்கை |
| அறுகம்புல் | மாவிலை | வாழையிலை |
| கோசலம் | கோமயம் | பால் |
| இளநீர் | மான் தோல் | தட்டம் |
| வேட்டி சால்வை (கிரியை செய்வோருக்கு) | | வாழைப்பழம் |
| எலுமிச்சம்பழம் | பழவகைகள் | பாக்கு |
| வெற்றிலை | | |

(இறந்தவருக்கு) வேட்டி சால்வை அல்லது சேலை சட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அந்தியேட்டிக் கிரியைக்குத் தேவைப்படும் பொருட்கள் :**

| | | |
|---|---|---|
| நெல்லு | பச்சை அரிசி | பயறு |
| உழுந்து | எள்ளு | தேங்காய் 20 |
| கழிநூல் பந்து | பஞ்சவர்ண நூல் | விபூதி |
| குங்குமம் | சந்தனம் | பன்னீர் |
| அபிஷேகக் கூட்டு | அபிஷேகத்திரவியம் | நவதானியம் |
| நெற்பொரி | நெய் | சமித்துக்கட்டு |
| ஊதுபத்தி | விளைவு சூடம் | சாம்பிராணி |
| அரிசிமா | மஞ்சள் மா | நல்லெண்ணெய் |
| அரப்பு | குருக்கள் வேட்டி சால்வை | |
| கும்ப வேட்டி | பட்டுத்துண்டு சிகப்பு பச்சை | வெற்றிலை |
| பாக்கு | வாழைப்பழம் | எலுமிச்சம்பழம் |
| பழவகைகள் | அறுகம்புல் | பால் |
| தயிர் | கோசலம் | கோமயம் |
| இளநீர் | வாழையிலை | மாவிலை |
| முட்டி 1 | சட்டி 1 | உரல் உலக்கை |
| தேங்காய் எண்ணெய் | சில்லறைப் பணம் | செம்பு 12 |
| குடம் 1 | குத்துவிளக்கு | தட்டம் |
| மான்தோல் | பூ, மாலைகள், சரப்பந்து | அமுது |
| பலகார வகைகள் | | |

**முடிவுரை :**

சமய தீட்சை பெற்று சமய ஆசார ஒழுக்கத்துடன் வாழுகின்ற ஒருவர் இறந்த பொழுது அவருக்கு தேகத்திலே அந்தியேட்டி முதலிய கிரியைகளைச் செய்தல் வேண்டும். அப்படியில்லாதவன் மரித்த பொழுது அவனுடலை சிவாக்கினியினாலே தகித்து விட்டு பின்பு ஆசௌச முடிவிலே தருப்பையால் புத்தளிகை செய்து அதை இறந்தவனது தேகமாகப் பாவித்து அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்தல் வேண்டும்.

மரண வீட்டுக் கிரியைகள் யாவும் (அபரக் கிரியைகள்) இடப்புறமாகவும் சங்காரக் கிரமமாகவும் (கீழிருந்து மேலாக) பாதம் இருந்து சிரசு பரியந்தமாகச் செய்யப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதவுடலுக்கும், அஸ்தியிலும் விபூதி தரிக்கும் பொழுது பஞ்சப்பிரம மந்திரங்களை சத்தியோஜதம் முதலாக உச்சரித்து முழந்தாள், கொப்பூழ், மார்பு, நெற்றி, சிரசு முதலிய இடங்களில் தரித்தல் வேண்டும். அஸ்தி எடுக்கும் பொழுதும் இந்த முறையில்தான் எடுத்தல் வேண்டும்.

அந்தியேட்டி கருமங்களைச் செய்து முடித்துவிட்டு கர்த்தாவானவன் வீட்டிற்கு வரும் பொழுது வாசலில் தீபம், பூரணகும்பம், பசு, அறுகம்புல், வேப்பிலை, உலக்கை, கல்லு அக்கினி, கடுகு இவைகளை வைத்தல் வேண்டும். கர்த்தாவானவன் வேப்பிலை தின்று, பசுவுக்குப் புல் கொடுத்து உலக்கையைக் கடந்து, கல்லில் கால் வைத்து, அக்கினியில் கடுகு இட்டு இவைகளைப் பரிசித்து வருதல் வேண்டும். இவைகள் தேசவழக்கிலுள்ளன.

**பாஷாணம் விடும் முறை :**

முன்னர் பிண்டத்தை ஒருவரும், அவர் பின்னே கும்பத்தை ஒருவரும், அவர் பின்னே பாஷாணத்தை ஒருவருமாகச் சங்க வாத்தியத்தோடு கொண்டு சென்று புண்ணிய நதிக் கரையையடைந்து மார்பளவு தண்ணீரில் சென்று வடக்கு முகமாக நின்று பிண்டம், கும்பம், பாஷாணம் என்ற முறைப்படி விட்டுத் தீர்த்த மாடி வரவும். சைவபூஷணம் (பக்கம் 185) முன்னரே எடுத்து வைத்த அஸ்தியையும் பாஷாணத்துடன் கொண்டு சென்று விடவும்.

சிராத்த விடயத்திலே விசுவ தேவர்களாகிய நந்தி மகாகாளரை கிழக்கு முகமாகவும் பதிர் தேவர்களாகிய கந்த, சண்ட, கணாதீசர்களை வடக்கு முகமாகவும், சிவனடியார்களாகிய அதிதியையும் அப்பியாகத்தரையும் மேற்கு முகமாகவும், இறந்த ஆன்மாவாகிய நிமித்தரை மேற்கு முகமாகவும் பூசித்தல் வேண்டும். (சிராத்த தீபிகை பக். 39)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தியேட்டி கிரியா காலங்களிலும், சிராத்த கிரியா காலங்களிலும் இயன்றளவு தான தருமங்களைச் செய்தலும் பய பத்தியோடும் திருமுறைப் பாராயணம் பண்ணுவதும் அன்னதானம் செய்தலும் மிகவும் முக்கியமானவையாகும்.

பெரு மக்களே! இறைவன் திருவருளினாலே அபரக்கிரியை என்னும் பெரும் சமுத்திரத்தினுள் மூழ்கி முத்துக்களாகிய சில முக்கிய குறிப்புக்களை எமது சிற்றறிவுக்கு எட்டிய வகையில் எழுதியுள்ளேன். இவற்றில் குறைநீத்து குணம் கண்டு பயனடையும் வண்ணம் வேண்டுகின்றேன்.

***லோகா சமஸ்தா சுகினோபவந்து***

**இங்ஙனம்**
**க. சிவபாதசுந்தரக் குருக்கள்**
**01.03.1986**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 01 . 04 . 1951



உதிர்வு 27 . 10 . 2017

வலி கிழக்கு (தெ.ம) ப.நோ.கூ. சங்கத்தின் பதில் களஞ்சியப்
பொறுப்பாளராக கடமையாற்றும் திரு.ஷ. கோபாலகிருஸ்ணன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

ஸ்ரீ

## சிவசிதம்பர தேசிகர் ஷண்முகதாஸன்

**குருக்கள் அவர்கள்**

நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ணமதில்
என்றும் நிலைத்து வண்ணமலர் வாசமாக
மனதில் நின்றீர் கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**பணிப்பாளர்கள், பணியாளர்கள்**
வலி கிழக்கு தெ.ப.ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்நன்றி கொண்ட மகற்கு"*

*"எம்மை உயிருக்குயிராய் அன்புடன் அரவணைத்து நின்ற*
*எமது குடும்பத் தலைவர்*

## அமரர்

## சிவசிதம்பரதேசிகர் சண்முகதாஸ் குருக்கள்

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன்வந்து எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங் களிற்கும், செய்தி அறிந்து அனுதாப செய்தி அனுப்பிய அன்பர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து தொடர்புகொண்டு துயரினை பகிர்ந்து கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் மாலை சாத்தி அனுதாபம் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும், அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் இம் மலரை அழகுற அச்சிட்டுத் தந்த சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.



பழைய வீதி.
கோப்பாய் தெற்கு.
இருபாலை.

இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

## அருந்தலைமுறையினராகிய நான் மொழி வித்தகரும் யாழ்ப்பாணத்து ந

## பரம்பரை வி

●மயில்வாகனக் குருக்கள்

↓

●இராமலிங்கக் குருக்கள்

↓

துரைச்சாமிக் குருக்கள் + ●பறுவதம்மா

●கணேசலிங்கையர்
+
●செல்வநாயகம்
↓
முருகையாக் குருக்கள்
பொன்னம்பல ஐயர்
கந்தசாமி ஐயர்
வீரபத்திரக் குருக்கள்

●சிவசிதம்பரதேசிகர்
+
இராசலட்சுமி அம்மா

●மதிவ

**●சண்முகதாஸ் குருக்கள்**
+
●மதிவதனி

கோபாலகிருஸ்ணன் + வளர்மதி
↓
அபிசன்
அம்சவர்த்தன்
ஆர்த்தி

ஸ்ரீரஞ்சினி

சித்திராவதனி + டுஸ்யந்தன்

●பறுவதேஸ்வரி

சிவராசஐயர்
+
விக்கினேஸ்வரி
↓
சிவரூபன் + நிருபா
சிவசுதன்

துரைச்சாமி ஐயர்
+
செல்வராணி

உதயதாஸ்ஐயர் + மோகனா
↓
அபிநயன்

உதயகௌரி + சுதர்சன்

சச்சிதானந்தஐயர்
+
சிவமலர்

சௌமியா + ஜெயமோகன்
↓
அதிஜெயன்
ஆருத்திரா

கௌரிசங்

பிரப

சுந்தர
குரு

விப
த
திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழி

## நல்லூர் ஆறுமுகநாவலரின் மாணாக்கருமாகிய மயிலுக்குருக்கள்

## ிளக்கம்

•சிதம்பரநாதன்
↓
வைத்தியநாதர் + •பராசக்தி
↓
•சுப்பிரமணியதேசிகர் (சின்னத்தம்பிஐயா) + •பறுவதம்மா
↓
•சிவசுப்பிரமணியம் (ராஜா ஐயர்) + பராசக்தி

ிவதனி

அகிலாண்டேஸ்வரி + குமாரசாமி ↓ பிரதீப், அபிராமி

யோகஜெகதீஸ்வரன் + வளர்மதி ↓ நமிலன், ஜனகன்

வைத்தியநாதன் + சுபத்ரா ↓ சதுர்சன், விஸ்னா, சுவாதி

சிவயோகநாதன் + தட்சாயினி ↓ அமிர்தவர்சினி, சினேகா

சிவகௌரி + சிறிறங்கநாதன் ↓ சிந்தியா, திரிசா, நிசோ

கோதாண்டதாஸ்குருக்கள் + மஞ்சுளாதேவி ↓ ரம்மியா

ங்கர்

புவனேஸ்வரி + சோமாஸ்கந்தராஜக்குருக்கள்

லம்போதரஜோதிஐயர் + சிவரஞ்சினி அம்மா ↓ லாவண்யன், லாவண்யா, லவ்மிகன், லவ்மிகா

அமிர்தவல்லி + கலைச்செல்வநாதன் ஐயர் ↓ சிவமதி + பத்மலோஜசர்மா, •கலையரசன், கலைவாணன், கலையரசன்

•துருவாசகர்

(புவனேஸ்வரி + சோமாஸ்கந்தராஜக்குருக்கள் ↓)

ரபாலினி + ந்ரலிங்கக் ருக்கள் ↓ விபூசன், தரணி, ருஸ்சன்

ஜீவிதா + திருஞானசம்பந்தக் குருக்கள் ↓ ஷம்சிகன், சங்கவி

தனஞ்செயக் குருக்கள்

சங்கீர்த்தனி + பிரசன்னக்குருக்கள் ↓ ஹர்சப்பிரதன்

•சிற்பவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் நமசிவாய

திருவாசகத்தை மாணிக்கவாசகர் ஓத, எம்பிரான் சிவபெருமான் எழுதியக் காட்சி.





மாணிக்கவாசகர் திருவடி தீட்சை



மார்க்கண்டேயர் வரலாறு

சிவரஞ்சனம். 077 3068982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org